பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை 07.10.2022 கதிர் 334

### இது ரகசியம் அல்ல!

அரசியலில் ஒரு முக்கிய விடயம் இருக்கின்றது. அது – சமயம் பார்த்துப் போட்டுக் கொடுப்பது. நம்மவரை ஆதரிக்கவும், எதிர்த் தரப்பை வீழ்த்தவும் பயன்படுத்தும் ஆயுதமே இந்தப் போட்டுக் கொடுத்தல். ☞2

# மோதவிட்டுக் குளிர் காய முயல வேண்டாம் என சீனா மீது யாழ். பல்கலை மாணவர்கள் காட்டம்

வடபகுதி மீனவ சமூகங்களிடையே அட்டைப் பண்ணை என்ற போர்வையில் பிரிவுகளை ஏற்படுத்தி மோதவிடும் செயற்பாட்டை சீனா மேற்கொள்வதாக அறியக் கிடைக்கும் நிலையில் அதனை சீனா நிறுத்த வேண்டும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சார்பில் கோரிக்கை முன்வைக்கிறோம்.

- இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அறிக்கை ஒன்றில் கோரியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வடபகுதியில் சீனா ஆதிக்கத்தை பலப்படுத்துவதற்காக சீனா பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில் அதில் ஒரு வடிவமாக யாழ் மற்றும் கிளிநொச்சி பகுதிக் கடல்களில் சீனா முதலீட்டுடன் அட்டைப் பண்ணைகள் செயற்படுவதாக எண்ணுகிறோம். ☞12

# ஜெனிவாத் தீர்மானம் நேற்று நிறைவேற்றம்

## 20 நாடுகள் ஆதாரவு; 7 எதிர்ப்பு மற்றும் 20 நாடுகள் நடுவுநிலை



ஜெனிவா,ஒக்ரோபர் 06

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட சிறிலங்கா தொடர்பான பிரேரணை நேற்று 13 மேலதிக வாக்குகளால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில் ஆதரவாக 20 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 20 உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ☞12

## ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு!



ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் ஐ.நா. மற்றும் ☞2

## சுமந்திரன், சாணக்கியனின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் என நாடாளுமன்றில் புகார்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.07

புலனாய்வாளர்கள் எனச் சொல்லப்படுபவர்களினால் தனதும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனதும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு ☞12



## 22ஆம் திருத்தம் மீதான விவாதம் ஒத்திவைப்பு!

நாடாளுமன்றில் நேற்றும் இன்றும் இடம்பெறவிருந்த அரசமைப்பின் 22ஆம் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ☞12

## சம்பந்தனை இழிவு படுத்தி செய்தியை வெளியிட்டவர் மன்னிப்புக் கேட்டார்!

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம், ஒக்.07

நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை இழிவு படுத்தி செய்தி வெளியிட்டவரை பொது மன்னிப்புகோர நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு பணித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரகசியமாக ஒளிப்படம் எடுத்து வெளியில் வழங்கியுள்ளார் எனவும், அதனைத் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களுடன் நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறும் வகையில் வெளியிட்டுள்ளனர் என விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான சிறப்புரிமைக் குழுவின் கவனத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொண்டு சென்றிருந்தார்.

இதனை விசாரனை செய்த குழு முன் அதனை வெளியிட்டவர், முகநூல் மூலம் நாடாளுமன்ற ☞12

## லொறி கவிழ்ந்ததில் ஒருவர் உயிர்ழப்பு



கொட்டகலை – திம்புல பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராவணகொட – விஜயபாகுகந்த, மெதகம்மெத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு லொறியொன்று வீதியில் கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். ☞13

## கோப்பாயில் 13 வயதுச் சிறுமியை கெடுத்த 73 வயது முதியவர் கைது

பதின்மூன்று வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் இருபாலையைச் சேர்ந்த 73 வயது முதியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். ☞2

## மணலாறில் 15 ஆயிரம் ஏக்கரை பிடுங்க இரகசியக் காய்நகர்த்தல்

(நடராசா லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 தமிழ்க் கிராமங்களை வெலிஓயாவுடன் இணைத்து சிங்கள மயப்படுத்த இரகசியத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது என அறிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் சட்டப்படியாக அன்றி வெறும் சுற்று நிரூபத்தினால் மட்டுமே நிர்வகிக்கப்படும் 114.4 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவான வெலிஓயா என தற்போது அரசினால் அழைக்கப்படும் தமிழர்களின் பூர்வீக நிலமான மணலாறு உள்ளிட்ட பகுதிகள் மகாவலி எல் வலயம் என மகாவலி அதிகார சபை வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டது.

இதற்கு எதிராக நீண்ட காலமாகவே தமிழர் தரப்பு குரல்கொடுத்த நிலையில் தற்போதைய கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ☞13

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் இப்படி ஒரு விடயத்தை பயன்படுத்தினார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

சம்பந்தன் எம்.பி. கடந்த ஆண்டு நாடாளுமன்றத்திற்கு - சபைக்கு - வருகை தந்த போது, தளர்ந்திருந்த அவரை இரண்டொரு எம்.பிக்கள் உதவி அளித்துக் கூட்டி வந்து ஆசனத்தில் இருத்தினர். அவர்கள் சம்பந்தனைத் தாங்கிப் பிடித்துக் கூட்டி வருவதை சபைக்குள்ளேயே கமராவில் ரகசியமாக வீடியோப் படம் எடுத்து, வெளியில் சமூக ஊடகங்களில் உலவ விட்டமை மூலம் நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டதான குற்றச்சாட்டு நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவின் முன் விசாரணைக்கு வந்தமை குறித்து சுமந்திரன் நேற்று சபையில் பிஸ்தாபித்தார்.

அந்த வீடியோவை சமூக ஊடகத்தில் உலவ விட்டவர் பிள்ளையானின் (சிவனேசதுரை சந்திரகாந்தனின்) கட்சியை சேர்ந்தவர் என்றும், அவர் தனது கட்சித் தலைவரே அந்த வீடியோவை தந்தார் என்பதை விசாரணைகளில் ஒப்புக்கொண்டார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார். அதுவல்ல விடயம்.

அந்தச் சமயத்தில் பிள்ளையான் குறித்து சுமந்திரன் தெரிவித்த இன்னொரு தகவல்தான் இப்படி போட்டுக் கொடுக்கும் வகையறாக்குள் வருகின்றது.

'இந்த உறுப்பினர் (பிள்ளையான்) மீது இந்தச் சபையின் இன்னொரு உறுப்பினரைக் கொன்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது' என்றார் சுமந்திரன். அது ஜோசப் பரராஜசிங்கத்தை மட்டக்களப்பில் கிறிஸ்மஸ் சமயத்தில் படுகொலை செய்த விவகாரம் பற்றியதாக இருக்கும். அடுத்தது தான் முக்கியம்.

'இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருடம் ஜூன் மாதம் எதிர்க்கட்சி வரிசையில் இங்கு அமர்ந்திருந்த போது, இந்த நபர்தான் (பிள்ளையாந்தான்) அறுநூறு பொலிஸ்காரர்களை கொன்றவர் என இங்கு அடையாளம் காட்டி இருந்தார்' என்றும் சுமந்திரன் குறிப்பிட்டு ஒரு குண்டைத் தூக்கி போட்டார்.

பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த போது அவரது அரசின் முக்கிய அமைச்சர் ரணில்.

இந்தியப் படைகளை வெளியேற்றி விட்டு, புலிகள் - பிரேமதாஸா அரசு முன்னெடுத்த சமரசப் பேச்சு என்ற தேன் நிலவு அடுத்த ஆறு மாதங்களில் முறிந்து, 1990 ஜூனில் யுத்தம் வெடித்த போது, கிழக்கில் சுமார் 600 பொலிஸார் புலிகளால் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது. (அரச வட்டாரங்கள் 774 பொலிஸாரும் 10 இராணுவத்தினரும் இவ்வாறு கொல்லப்பட்டனர் என்று கூறுகின்றன.)

இந்த 600 பேரைக் கொன்ற குற்றச்சாட்டைப் பிள்ளையான் மீது அன்று ரணில் சுமத்தினார் என்பது வெளியிடைமலை.

ரணிலுக்கு சில உண்மைகள் தெரியாவிட்டாலும் சுமந்திரனுக்கு நன்கு தெரியும். பிள்ளையான் பிறந்தது 1975இல். இந்த சம்பவம் நடந்த போது பிள்ளையானுக்கு வயது ஆக 15. அந்த வயதில் இத்துணை பொலிஸ்காரர்களைக் கொல்லும் வாய்ப்பு அல்லது அது குறித்துத் தீர்மானிக்கும் உரிமை புலிகள் இயக்கத்தில் பிள்ளையானுக்குக் கிடைத்திருக்கவே முடியாது.

இந்த அறநூறு பொலிஸாரும் கொல்லப்பட்ட பின்னர்தான் - அதே வருடத்தில் தான் - சிறுவர் போராளியாக புலிகள் இயக்கத்தில் இணைந்தார் பிள்ளையான் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இதெல்லாம் சுமந்திரனுக்கும் நன்கு தெரிந்திருக்கும். ஆனால் அரசியலில் போட்டுக் கொடுப்பதை - இன்றைய ஜனாதிபதி ரணில் அன்று சொன்னவற்றை வைத்து பிள்ளையானுக்குப் போட்டுக் கொடுக்கும் கைங்கரியத்தை - கனகச்சிமாகப் பண்ணியிருக்கின்றார் சுமந்திரன். அவ்வளவுதான்!

**- மின்னல் -**

## கோப்பாயில் 13 வயதுச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரினால் வன்புணர்வுக்கு உள்ளாகி கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரைக் கைது செய்தனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்கு முற்படுத்தியுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் வயோதிபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றியம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச சகாக் களுடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. ஜனநாயக விழுமியங்கள் மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி குறித்த முழுமையான அனைவரையும் உள்வாங்கும் கலந்துரையாடல்களிற்கு முழுமையான ஆதரவளிப்போம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
» Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
» Certificate in Graphic Designer – (PageMaker, PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
» AutoCAD 2D & 3D Modeling
» Java, C++ Programming
» Accounting Package Tally


**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**



# பல்கலைக் கழகங்களில் ஒருபோதும் வன்முறைகளுக்கு இடமளிக்கமுடியாது!

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவிப்பு



பல்கலைக்கழகத்திலோ வெளியிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஒருவரது மனித உரிமையை விட 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேராதனை பல்கலையில் பகிடிவதை சம்பவங்கள், மற்றும் பெற்றோரின் முறைப்பாடு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மனித உரிமை தொடர்பில் கவனம் எடுப்பதா என்பது தொடர்பில் கற்றவர்களும் நன்கு உணர்வர்.

அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களுக்காகவும் ஒருசிலர் செயற்பட்டு வருகின்றனர்.

அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கின்றோம். பேராதனை பல்கலைக்கழக சம்பவம் தொடர்பில் எனக்கு பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600 இற்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன.

மனித உரிமையை நாம் வரவேற்கின்றோம். எனினும் குறுகிய நோக்கங்களுக்காக செயற்படுபவர்கள் மற்றும் வன்முறைகளையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

## தனியார் நிறுவன ஆசிரியருக்கு ஒருவருக்கு ஒத்திவைப்பு சிறை!

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காகவும், விஜயதாஸ ராஜபக்ஷவை நீதிமன்றில் அச்சுறுத்திய குற்றத்துக்காகவும் தனியார் ஆசிரியர் ஒருவருக்கு 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையை உயர்நீதிமன்றம் விதித்துள்ளது.

3 வட்சம் ரூபா அபராதம் செலுத்தவும் 03 மாத சிறைத்தண்டனை விதித்தும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்து நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியதாகக் கூறிய நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள மறுத்த பிரதிவாதியான ஆசிரியர், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ மற்றும் நீதிமன்றத்திடம் மன்னிப்புக் கோரினார்.

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய முயற்சி: திருமலையில் பள்ளிவாசல் சுற்றுப்பயணம்!



திருகோணமலை, ஒக். 07

முஸ்லிம்களுக்கும் பிற சகோதர மதத்தினருக்கும் இடையே உறவு வலுப்படுத்த திருகோணமலையில் புதிய முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'பள்ளிவாசல் சுற்றுப்பயணம்' என குறிப்பிடப்படும் இந்த தனித்துவமான சர்வ மத நிகழ்வு, புதன்கிழமை திருகோணமலை அநுராதபுர சந்தியில் அமைந்துள்ள அல்ஹீலூர் ஜீம்ஆ பள்ளிவாசலில் இடம் பெற்றது.

இந்த சுற்றுப்பயணத்தில் உறவு ரீதியான வரவேற்பு, ஒழுங்கு படுத்தப்பட்ட பள்ளிவாசல் தரிசிப்பு, வணக்க வழிபாடுகளை நேரடியாக காண்பித்தல், இஸ்லாம் பற்றிய தவறான அபிப்பிராயங்களை தெளிவுபடுத்தல், முஸ்லிம்களின் கட்டடக் கலை வரலாறு, ஆன்மீக விழுமியங்கள் போன்றவற்றை அறிந்து கொள்தல், சுவரொட்டி கண்காட்சி என்பன இடம் பெற்றன. ஆரம்ப நிகழ் வில் மும்மத தலைவர்கள், அரச அதிகாரிகள், முப்படை அதிகாரிகள், பங்கேற்ற தோடு பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துக்கொண்டனர்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக அனைத்து மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அத்துடன் இந்த விடயத்தை பலரும் வரவேற்றுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பயனற்ற ஜெனிவா தீர்மானம்

ஜெனிவா திருவிழா முடிவடைந்து விட்டது.

வழமைபோல இலங்கை தொடர்பான பிரேரணை கணிசமான, முக்கிய மேற்கு நாடுகளின் அனுசரணை மற்றும் ஆதரவுடன் நிறைவேறி விட்டது.

சரி. இனி, என்ன?

30/01 மற்றும் 46/01 என்ற தீர்மான வரிசையில் இப்போதைய 51/01 இலக்கத் தீர்மானமும் சேர்ந்து விடும். அவ்வளவுதான்.

30/01 தீர்மானத்தின் பின்னர் இப்போதைய 51/01 தீர்மானத்துக்கு இடையில் 21 பருவ கால அமர்வுகள் கடந்து விட்டன.

இந்த ஏழு வருடங்களிலும் பயனுள்ள ஏதும் நடக்கவில்லை. முன்னேற்றகரமான அம்சம் ஏதும் இடம் பெறவில்லை என்பதை இந்தக் கடைசி மூன்று தீர்மான வாசகங்களுமே உறுதிப்படுத்தும்.

ஒவ்வொரு தீர்மானத்தினதும் வாசகங்களும் ஒன்றிலிருந்து மற்றது சற்று மேம்பட்டதாகக் காட்சியளிக்கின்ற போதிலும், விடயங்களிலும் விவகாரங்களிலும் பெரிய முன்னேற்றங்களோ, மேம்பாடுகளோ களத்தில் – இலங்கையில் – நடக்கவே இல்லை என்பது ஜெனிவாவில் கடந்த 21க்கும் மேற்பட்ட அமர்வுகளை அவதானிப்பவர்கள் இலகுவாக உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த முறை வாக்கெடுப்பில் முக்கியமான மூன்று விடயங்கள் நோக்கப்பட முடியும்.

ஒன்று – பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற முக்கிய நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை சேர்ந்து வாக்களித்து நிறைவேற்றி இருக்கின்றன. கனடா போன்ற பிரதான நாடுகள் வாக்களிக்கும் உரிமை இம்முறை இல்லாத போதும் பிரேரணைக்கு அனுசரணை ஆதரவு தந்துள்ளன.

அடுத்தது – பொலிவியா, சீனா, கியூபா, பாகிஸ்தான் போன்ற தத்தமது நாடுகளில் மிக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகும் நாடுகளே மேற்படி தீர்மானத்தில் மிக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருக்கும் இலங்கைக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றன. அதாவது 'வேலிக்கு ஓணான் சாட்சியம்' மாதிரியான கதை இது. உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளை மதித்துப் பேணி, மேம்படுத்தும் சிறப்புமிக்க எந்த நாடும் இலங்கைக்கு முண்டு கொடுக்க வரவே இல்லை என்பது இலங்கையின் சீத்துவத்திற்கு கிட்டிய சான்றிதழ்.

மூன்றாவது – இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் உலகுக்கு நியாயம் உரைக்கும் விடயத்தில் தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டை எடுத்து இறங்காமல், இன்னுமே நடுவு நிலைமை என்ற மதில் மேல் பூனை நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கின்றன.

இந்த மூன்று விடயங்களையும் கவனிக்கும் போதும், இலங்கை தொடர்பான கடந்த கால ஜெனிவா அரங்குகளின் செல்நெறிகளை நோக்கும் போதும், ஒரு விடயம் வெட்ட வெளிச்சமாக, தெளிவாக தோற்றுகின்றது.

அது – இலங்கையில் யுத்தக் கொடூரத்தால் பாதிப்புற்றோருக்கு நீதியைத் தேடி கொடுக்கும் விடயத்தில் ஜெனிவாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலினால் நீதியையும் பெற்றுக் கொடுக்க முடியாது, பொறுப்புக் கூறலையும் நிலைநிறுத்தச் செய்ய முடியாது, மீள நிகழாமையையும் உறுதிப்படுத்தச் செய்ய முடியாது என்பதுதான் அது.

'பயணத் துணைக்கு பேச்சுப் பல்லக்கு' என்ற மாதிரி உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளை நிலை நிறுத்தச் செய்வதில் ஐ.நா. முகவர் அமைப்பாகக் காத்திரமாக ஏதோ வெட்டி பிடுங்குவதாக ஜெனிவா அரங்கு கதை விடுவதற்கு – 'பாவ்லா பண்ணுவதற்கு' – இத்தகைய தொடர் நாடகம் இடமளிக்கும். அவ்வளவுதான். உண்மையில் – யதார்த்தத்தில் – பிரயோசனமான பெறுபேற்று விளைவுகள் எதையும் அது தரும் என்று நம்புவதற்கான வாய்ப்புகள், அமர்வுக்கு அமர்வு அருகிக் கொண்டுதான் செல்கின்றது.

# நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்கள் ஆணைக்கு இடமளிக்குக!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் இடித்துரைப்பு



மக்கள் ஆணையில் ஜனாதிபதி, பிரதமராக இருந்தவர்கள் பதவி விலகிய பின்னர் இந்த நாடாளுமன்றத்தில் மக்களின் விருப்பம் பிரதிபலிக்கப்படவில்லை. அதனால் நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்கள் தீர்மானத்துக்கு இடமளிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையியற் கட்டளை திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நிலையியற் கட்டளை திருத்தங்கள் தொடர்பான விடயங்களில் அதனை நடைமுறை ரீதியில் திருத்த வேண்டும். நாடாளுமன்ற குழுக்கள், நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் இருக்க வேண்டும்.

அத்துடன் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு வருடமாக நான் அந்தக் கூட்டங்களில் நிராகரிக்கப்பட்டேன். எங்கள் கட்சி சார்பில் இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் எங்களுக்கு அந்தக் குழுவில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் நிதி குழுக்கள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பான குழுக்களில் நாங்கள் அங்கம் வகிக்க வேண்டும். நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டையே நாங்கள் கொண்டுள்ளோம்.

இதில் குழு முறைமைகள் பலப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானது. இந்தக் குழுக்களின் ஊடாகவே முக்கியமான வேலைகளைச் செயற்படுத்த முடியுமாக இருக்கும்.

அத்துடன் நேர ஒதுக்கீட்டு விடயத்திலும் எமக்கு அநீதி ஏற்படுகின்றது. நான் கட்சி தலைவர். அதன்படி பேசுவதற்கு நேரம் வழங்கப்பட வேண்டும். குறைந்தளவு நேரமாவது வழங்க வேண்டும். எங்களின் கட்சிகள் போன்ற சிறிய கட்சிகள் மதிய நேரத்தின் பின்னர் பேசும்போது 12 நிமிடங்களாவது வழங்க வேண்டும்.

மேலும் அரசமைப்பு ரீதியில் நாடாளுமன்றம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. அரசமைப்பு ரீதியில் எந்தவித தடைகளும் இருக்கக் கூடாது.

முன்னைய பிரதமரும், ஜனாதிபதியும் அமைச்சரவையும் பதவி விலகிய பின்னர் இந்த சபை மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்கின்றேன். எவ்வாறாயினும் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இப்போதும் மக்களின் அந்த விருப்பம் நிராகரிக்கப்படுகின்றது.

அத்துடன் குருந்தூர் மலை என்பது தமிழ் மக்கள் வழிபாட்டில் ஈடுபடும் ஒரு புராதன இடமாகும். தொல்பொருள் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த விதுர விக்கிரமநாயக்க அங்கு அடிக்கல்லொன்றை நாட்டியிருந்தார். அந்த இடத்தை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு முயற்சித்துள்ளனர்.

அந்த இடத்தை அழித்துவிட்டு அவ்வாறு விகாரையாக மாற்ற முடியுமா? அதற்கு யார் அனுமதி கொடுத்தது. இந்த விடயத்தில் நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களம் ஓர் இனவாதத் திணைக்களமாக காணப்படுகின்றது. தொழிற்படும் விதமும் அப்படிதான் உள்ளது. பௌத்த மதகுருவும் நீதிமன்ற உத்தரவையும் மீறியுள்ளார். அங்கு தொடர்ச்சியாக இனவாத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. – என்றார்.

# 22 ஆவது திருத்தம் தனிநபர் தேவைக்காக கொண்டுவரப்பட்டால் ஆதரவு கிடையாதாம்!

### காலை வாரியது பெரமுன



ஒரு தனி நபரின் தேவைக்காக 22 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படுமாயின் அதற்கு ஆதரவுவழங்க மாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

உரிய திருத்தத்தை முன்வைத்து நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்வதே சில கட்சிகளின் நோக்கம் என அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவது தேசத்திற்குள் பிரிவினைவாதத்தையே தோற்றுவிக்கும் என சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மக்கள் அரசமைப்பு திருத்தத்தை கோராத நிலையில் எனவே ஒருவரின் தேவைகளைபூர்த்திசெய்ய இதை முன்வைத்தால் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# தரமற்ற எரிபொருளை இறக்குமதி செய்து அதிக இலாபமீட்டிய முக்கிய பிரமுகர்கள்!

### தகவலை புட்டுவைத்தார் தயாசிறி

கொழும்பு, ஒக்.07


தரமற்ற எரிபொருளை இறக்குமதி செய்தமை மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முகவர்களும் அரசியல்வாதிகளும் 10 கோடி டொலர் சம்பாதித்துள்ளதாகனர் என சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மேற்படி தகவல் தமக்கு கிடைத்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தற்போதைய எரிசக்தி அமைச்சர் நியமிக்கப்பட்டதன் பின்னர் எரிபொருள் இறக்குமதிக்காக புதிய நிறுவனம் பதிவு செய்யப்பட்டு அதன் ஊடாக எரிபொருள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் கூறியுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மலிவு விலையில் எரிபொருளை வாங்கக் கூடிய நிறுவனங்களுக்கு பதிலாக தரம் குறைந்த கச்சா எண்ணெயை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.




கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall

Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi

- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL




### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அது நிறைவேற்று, நீதித்துறை மீதும் தாக்கம் செலுத்தும்!

## நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

நாடாளுமன்ற செயற்பாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதன் தாக்கம் நிறைவேற்று மற்றும் நீதிதுறையின் மீதும் செல்வாக்கு செலுத்தும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட விடயங்களுக்கு நாடாளுமன்ற வரபிரசாதங்கள் ஊடாக முக்கியத்துவம் வழுங்குவதால் மக்கள் நாடாளுமன்றக் கட்டமைப்பை வெறுக்கிறார்கள் என நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு இடையில் குற்றவாளிகளை மீள ஒப்படைத்தல் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையில் திருத்தம் செய்யும் அதிகாரம் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ளது, 2018 ஆம் ஆண்டு நிலையியல் கட்டளை உருவாக்கப்பட்டது.

கால மாற்றத்துக்கமைய நிலையியல் கட்டளையில் ஒருசில திருத்தங்கள் உள்வாங்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளார்கள்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பான முழு அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றல் நாடாளுமன்றத்தின் தலையாய பொறுப்பாகும். ஆகவே நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் ஒழுக்கமானவையாகவும், வெளிப்படைத் தன்மையானவையாகவும் அமைய வேண்டும்.

அரச கொடுக்கல் வாங்கள்களில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகளை கோப் குழு உள்ளிட்ட நாடாளுமன்ற கண்காணிப்பு குழுக்கள் வெளிக் கொண்டு வந்துள்ளன.

கண்காணிப்பு குழுக்களின் அறிக்கைகள் வெறும் அறிக்கையாக மாத்திரம் மட்டுப்படுத்தாமல்,அதன் பரிந்துரைகளை செயற்படுத்த நாடாளுமன்ற நிலையியல் கட்டளை ஊடாக திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுமாயின் அது நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய துறைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும்,சட்டம்,நீதி மற்றும் நிறைவேற்று ஆகிய துறைகளின் செயலொழுங்கு பாதிப்பு ஏற்பட்டால் நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க முடியாத நிலை ஏற்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தனிப் பட்ட விடயங்களுக்கு நாடாளுமன்ற வரபிரசாதங்கள் ஊடாக முக்கியத்துவம் வழுங்குவதால் மக்கள் நாடாளுமன்றக் கட்டமைப்பை வெறுக்கிறார்கள். அரசமைப்புக்கு அமைய சகல தரப்பினரும் செயற் பட்டால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. – என்றார்.

# மினுவாங்கொடையில் துப்பாக்கிச்சூடு: தந்தை மற்றும் இரண்டு மகன்கள் பலி!

மினுவாங்கொடையில் நேற்று (வியாழக்கிழமை) காலை 7 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

ரி – 56 ரக துப்பாக்கியால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் தந்தை மற்றும் இரண்டு மகன்களே சம்பவத்தில் உயிரிழந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதுடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரு மகன்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தந்தை செல்வா பிழை விட்டாரா?



என்.சத்தியமூர்த்தி

அண்மையில் திலீபன் நினைவேந்தலின் பெயரில் தமிழர் தலைமைகள் அடித்து உதைத்துக் கொண்டதைப் பார்க்கும் போது, கொழும்பு ஆட்சியாளர்கள் கடந்த ஆண்டுகளில் தவறிழைத்து விட்டார்களோ(!) என்றே எண்ணத் தோன்றுகிறது. காரணம், தமிழர்களின் எழுச்சி நிகழ்சிகளுக்கு அரசு தடை விதித்த போதெல்லாம் மக்களின் சமூக – அரசியல் தலைமைகள் ஒன்றாக இயங்கி வந்துள்ளன. அதே சமயம். இந்த முறை போன்று, தமிழர் முன்னெடுப்புகளை அரசு கண்டு கொள்ளாமலே இருந்தால், அவர்களுக்குள்ளேயே பிரச்சினைகள் தோன்றுவதும் தவிர்க்க முடியாததாகி விட்டது.

அந்த வகையில், முன்னாள் ராஜபக்ஷ அரசுகள், இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், தமிழர்களின் பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்தனர். அதனால், அவர்களும் கூட பிரச்சினைகளைச் சந்தித்தினர். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே அரச தலைமை பொறுப்பில் இருந்து வந்திருக்கும் போதெல்லாம், தமிழர்களின் இனப் போராட்டத்தையும் மனப்போராட்டத்தையும் ஆதரிக்கும் முகமாக, அதனை தடை செய்யாமல் நடைபெற வழி செய்து வந்



துள்ளார்.

இதற்கு முக்கிய காரணம், ரணில் தமிழர் வாக்குவங்கியையும் குறி வைத்து அரசியல் செய்து வருபவர். ராஜபஷக்கள் சிங்கள வாக்குவங்கிக்குச் சொந்தக்காரர்கள் என்று தங்களை காட்டிக்கொண்டு வந்தவர்கள். அதிலும் குறிப்பாக, சிங்கள – பௌத்த பேரினவாதத்தினை அடிப்படையாகக் கொண்டே, ராஜபக்ஷக்கள் ஆட்சி செய்து வந்தார்கள் என்ற பொதுவான கருத்து நிலவி வந்துள்ளது.

## உள்வீட்டு சண்டைகள்

திலீபன் நினைவேந்தல் நிகழ்வு என்னவோ, தமிழர் சமூக – அரசியல் பரப்பு முழுவதையும் சென்றடையவில்லை, அல்லது ஆக்கிரமிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், இன்னமும் பெரிய அளவில் வேரூன்றாமல் இருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணயின் இரு பிரிவினருக்கு இடையே அரங்கேறிய உள்குத்து சண்டையாகவே அந்த நிகழ்ச்சி முடிந்தது. கூட்டமைப்பு உள்ளிட்ட பிற தமிழ் அரசியல் கட்சிகள் தள்ளி நின்று வேடிக்கை பார்த்தன. எள்ளி நகையாடவும் செய்தன.

இதன் காரணமாகவோ என்னவோ, அந்த நிகழ்சியை முன்னிறுத்தி அரசியல் முதல் எடுக்கப்பார்த்த வேலன் சுவாமிகள் முதலானோர் காணாமல் போய்விட்டனர். இதுவே, முன்பு அரங்கேறிய பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நடைபயணத்தின் முடிவாகவும் அமைந்தது.



ஆனால், அந்த நிகழ்வில் மக்கள் முன்னணியினர் பங்குபெற்றிருக்கவில்லை.

சுருங்கச்சொன்னால், யாருமே காணாமல் விட்டுவிட்டால், தங்களது உள்வீட்டு சண்டைகளால், தமிழர் தரப்பு பிறருடைய கவனத்தை தங்களிடம் திரும்பிக்கொள்ளும் திறமையைப் பெற்றிருக்கிறது. அதற்குக் கட்சி அடையாளம் கூட தேவையில்லை. என்ன, இதே நிலைமை தொடருமானால், இந்தத் தலைமுறை தலைமைகளுக்கு பின்னர், தமிழர் தரப்புகளுக்கு சொல்லிக்கொள்ளும் படியாக தலைவர்களோ, கொள்கைகளோ இருக்காது. அதனால், யாருக்கு லாபமோ இல்லையோ, தமிழ் சமூகத்திற்கு நிச்சயமாக நஷ்டம்தான்.

## கண்ணில் தெரியாத ஆயுதம்

தந்தை செல்வா இலங்கை காந்தி என்று அறியப்பட்டார். மகாத்தமா காந்தியை போல், தமிழர்கள் அஹிம்சை வழியில் போர் செய்யக் கற்றுக் கொடுத்தார். காந்திஜி அவ்வாறான போர் முறையை இந்திய சுதந்திர போராட்டத்தின் ஆயுதமாகக் கையில் எடுத்த போது, அதற்கு இன்னமும் சொல்லப்படாத காரணங்கள் இருந்தன. அந்த காரணங்கள் சொல்லப்படாமலே போனதால், அவை புரிந்து கொள்ளப் படாமலும் போய்விட்டன.

குறிப்பிட்டு சொல்லப்போனால், காந்திஜியும் ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரும் சமகாலத்தவர்கள். இருவருமே, கடந்த 1920 வாக்கில் தத்தமது நாடுகளில், தத்தமது போராட்டங்களை துவங்கினார்கள். அவர்கள் இருவருமே ஒன்றுக்கொன்று எதிர்மறை ஆயதங்களைத் தங்கள் மக்களுக்கு வழங்கினார்கள். இறுதியில் அவர்கள் இருவரில் யார் வெற்றி பெற்றார்கள் என்பதை சரித்திரம் சொல்லித் தந்திருக்கிறது.

இருவரில், காந்திஜி கடந்த ஆயிரம் ஆண்டுகளாக போர் செய்து பழக்கம் இல்லாத, அல்லது செய்த போர்களிலும் தொடர்ந்து தோல்வியையே சந்தித்து வந்த மக்களுக்குத் தலைமை ஏற்றிருந்தார். அவர்களுக்கு ஆயுதம் கொடுத்து, அவர்களுக்கு ஆயுத பயிற்சியும் கொடுத்து பிரித்தானிய காலனி ஆதிக்கத்திற்கு எதிராக போராட வைத்து, அதில் வெற்றியும் பெறுவது என்பது இயலாத காரியம் என்பதை உள்மனதிலேயே உணர்ந்தார்.

அதற்கு மாற்றாகவே, தனது மக்களின் சுதந்திர போராட்டத்திற்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் ஆயதத்தை பிரித்தானிய எதிரி பாவிக்க முடியாது என்பது மட்டுமல்ல, அதனைப் புரிந்து கொள்ளவும் முடியாததாக இருக்க வேண்டிய அவசியத்தையும் அவர் உணர்ந்தார். ஏன், சுதந்திர போராட்ட காலத்தில், காந்திஜி இந்தியர்களுக்கு கொடுத்த அந்த ஆயுதத்தை கையில் எடுத்து செல்ல முடியாது. எனவே அதனை ஆட்சியாளர்கள் தரப்பு பறித்து செல்லவும் முடியவில்லை.

## ஆத்ம சக்தி, அஹிம்சை

அதனை காந்திஜி, ஆத்ம சக்தி என்றார். அதன் வெளிப்புறத் தோற்றமே அஹிம்சை. அவரை பொறுத்தவரை, அஹிம்சை என்பது கையாலாகாததனத்தின் வெளிப்பாடு அல்ல. மாறாக, அஹிம்சையோடு அவர் கற்பித்த மன உறுதி, அவரது மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது. ஆளும் வெள்ளையரை தொடர்ந்து அடித்து வெற்றி பெற முடியாது, மாறாக, அவன் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டும் போது, அவன் வெட்கித் தலை குனிவான்.

இயேசு பிரானின் இந்த தாரக மந்திரத்தை ஒரு மக்கள் கூட்டத்திற்கே போதித்து அதில் வெற்றியும் பெற்றுக் காட்டினார், மகாத்மா காந்தி. அது போன்றே, கடைசி வரை அஹிம்சை என்ற ஆயுதத்திற்கு மாற்று ஆயுதத்தை, பிரித்தானிய காலனி ஆட்சியாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், இரண்டு உலக போர்களிலும் ஜெர்மனியை வீழ்த்துவதற்கான பீரங்கிகள், போர் விமானங்கள், போர் கப்பல்கள் மற்றும் ரோடர்கள் போன்றவைதான்.

அவ்வாறானால், காந்திஜியின் அஹிம்சை என்ற ஆயுதத்தை கையில் எடுத்த தந்தை செல்வா எங்கு பிழை விட்டார்? அல்லது, அவர் பிழை விட்டாரா இல்லையா? இந்த கேள்விகளுக்கு சமகால நிலைமையை கருத்தில் கொண்டு பதில் காண்பது தற்காலத்திற்கு அவசியம் ஆகிறது.

## சமகாலத்தின் பிரதிபலிப்பு

காந்திஜி, தான் சுட்டுக் கொல்லப்படும் வரை, தனக்குப் பின் தனது மக்களுக்கு என்ன வழி என்று கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மாறாக, உடல் நிலை காரணமாக, தந்தை செல்வாவிற்கு அந்த கவலை வந்திருக்க வாய்ப்புகள் இருந்தன.

அதன் காரணமாகவும், எழுபதுகளில் துவங்கிய ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் போராளி குழுக்களின் பாதையில் அவர் பயணிக்க துவங்கினார். அது கொள்கை ரீதியானதே தவிர, அவர்களது முறைகளை அவர் ஏற்றுக்கொண்டார் என்றோ, ஆதரித்தார் என்பதல்ல பொருள். வட்டுக்கோட்டை தீர்மானம், அவரது சமகாலத்திய மனநிலையின் பிரதிபலிப்பே.

எங்கே, தான் தனது பழைய நிலைபாடுகளில் தொடர்ந்து நின்று கொண்டிருந்தால், அன்றைய இளைஞர் போராட்ட குழுக்கள் மிதவாத அரசியலை இல்லாமலே ஆக்கிவிடுமோ என்ற கவலை தந்தை செல்வாவிற்கு இருந்திருக்கலாம். என்றாலும், அவரது அங்கீகாரம் இருந்ததால், அவரது கோரிக்கைகளுக்கு தங்களது வகையில் செயல்வடிவம் கொடுப்பது, போராளி குழுக்களுக்கு எளிதாயிற்று.


எழுபதுகளின் தமிழர் போராளி குழக்களின் காந்திஜி கால பிம்பமாகவே நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் விளங்கினார். அதனால் தானோ என்னவோ, விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், சுபாஷ் சந்திர போஸை தனது முன்னோடியாக வரிந்து கொண்டார். அவரை போலவே, போராளி குணத்தை வளர்த்துக் கொண்டு, அதனையே தன்னோடு சேர்ந்தவர்களுக்கும் பயிற்றுவித்தார்.

## நல்வழிப்படுத்தல்

ஆனால், சமகால இந்தியாவில் நேதாஜியின் வழிமுறை செயல்படாமல் தவறான எதிர்வினைகளையே தோற்றுவிக்கும் என்பதனை காந்திஜி புரிந்து வைத்திருந்தார். அதற்கேற்ப செயல்பட்டார். அந்த வகையில், காந்திஜி மற்றும் நேதாஜி ஆகியோரது வழிமுறைகளில் எது வெற்றிபெறது என்பதையும் சரித்திரம் பிரபாகரனுக்கும் சொல்லிக் கொடுத்திருந்தது. அவரது தலைமையை ஏற்றுக்கொண்டோருக்கும் சொல்லிக் கொடுத்திருந்தது. ஆனால், அவர்களால் அந்த உண்மையை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

என்ன, தமிழர்களின் விதிவசத்தால், தந்தை செல்வா வழிவந்த மிதவாத தலைமைகளும் அவரை பின்பற்றி வந்தோரும், அந்த வழிமுறைக்காக விடுதலை புலிகள் இயக்கத்தவரிடம் தங்களது உயிர்களை இழக்க வேண்டிய அலங்கோலம் இங்கு மட்டுமே அரங்கேறியது. அதனை தொடர்ந்து மிதவாத தலைவர்களில் பலரும் பிரபாகரனின் பாதையில் பயணிப்பதையே விரும்பி ஏற்றுக்கொண்டார்கள். ஒரு சிலரே, வன்முறை அரசியல் வேண்டாம் என்று ஒதுங்கி இருந்தார்கள். அல்லது ஓரம் கட்டப்பட்டார்கள்.

இது தவிர, பிறிதொரு பகுதியினர், வன்முறை அரசியல் வெற்றிபெறாது என்று திடமாக நம்பினார்கள். அவ்வாறான சூழ்நிலையில் தமிழரின் அரசியல் களம் தலைமை இன்றி அனாதரவாக நிற்கும் காலம் தோன்றும் என்பதனையும் கருத்தில் கொண்டார்கள். அது போன்றே, வன்



முறை அரசியலால் கவரப்பட்ட அந்த தலைமுறையினரை, அவர்களை அணைத்துக்கொண்டு சென்றால் மட்டுமே நல்வழிப் படுத்த முடியும் என்றும் நம்பினார்கள். எனவேதான், விடுதலை புலிகள் இயக்கத்தின் ஊதுகுழலாக சிறிது காலம் பயணித்தார்கள். பவனி வந்தார்கள்.

## புரியாத புதிர்

அந்த வகையில், தந்தை செல்வா காலத்திற்கு பின்னரும் காந்திஜியின் வழியைப் பின்பற்றி தன்னுயிரை நீத்த திலீபன், விடுதலை புலிகள் இயக்கத்தில் எப்படி தொடர்ந்தார் என்பது ஒரு விதத்தில் புரியாத புதிர். அதை விட முக்கியமானது, திலீபன் வழியில், அன்றைய தமிழர் தலைமைகள் தங்களது போராட்டத்தை அஹிம்சை வழிப்படுத்தி இருந்தால், வன்முறையால் கிடைக்காத வெற்றி அன்று கிடைத்திருக்குமோ? என்ற கேள்வி.

ஆனால், அன்றைய சூழலில், தந்தை செல்வா அளவிற்கு, அது போன்ற அஹிம்சை வழியில் தமிழ் மக்களை வழிநடத்தி அதில் வெற்றிபெறும் வகையிலான தலைவர்கள் யாருமே இல்லை. இன்றைய நிலைமையை வைத்து நோக்கும் போது, அன்றே பிரபாகரன், திலீபன் நினைவாக அவ்வாறான பாதை மாற்றத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அவர் பின்னால் இளைஞர்களும் யுவதிகளும் நின்றிருப்பார்களா? சந்தேகமே.

இவற்றிற்கெல்லாம் அப்பால், அவ்வாறு அஹிம்சை வழியில் மாறவேண்டும் என்று பிரபாகரனோ, அல்லது விடுதலை புலிகள் இயக்கத்தின் இரண்டாம் கட்ட தலைவர்களோ நினைத்ததாக தெரியவில்லை. ஏன், அன்று வேறு சில – பல போராளி குழக்களுக்கு தலைமை வகித்தோரும் கூட, விடுதலை புலிகள் இயக்கத்தால் அழிக்கப்பட்ட ஒரே காரணத்தினால் தான் மிதவாத அரசியலுக்கு தாவினார்களே தவிர, முழு மனமாற்றத்தினால் அவ்வாறு செய்தார்கள் இல்லை.

இவர்களை போன்றோரின் கைகளில் தான், திலீபனின் தியாகமும் சிக்கிக் கொண்டு அசிங்கப்படுகிறது!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# தற்காலத்தில் மக்களின் வாழ்வியலும் இந்து சமயத்தின் போக்குகளும்!




பொதுநிலையில் சமயம் என்பது 'சமை' என்ற வேரடியிலிருந்து முகிழ்த்த பதமாகும். சமைத்தல் என்பது பதப்படுத்தல் அல்லது வளப்படுத்தல் என்ற பொருள் தாங்கி வருகிறது.

சாதாரண நிலையில் கணத்திற்கு கணம் மனித மனங்களிலிருந்து கிளர்ந்தெழுகின்ற எண்ணற்ற எண்ணங்களானவை நமது வாழ்வியலை சவாலுக்குட்படுத்தி வருகின்றன. இவ்வகையில் மேலெழும் எண்ண வகையறாக்களை செயல்நிலை அடிப்படையில் இரு வகைகளில் பிரித்து பார்க்கலாம். அவை நேர்முனைப்புடையவை, மற்றையது எதிர் முனைப்புடையவை. எளிமையான வகையில் கூறின் நல்லெண்ணங்கள் மற்றும் தீய எண்ணங்கள் என்பவையே அவையாகும். எண்ணங்களே சொற்களாகவும் செயல்களாகவும் பரிணமிக்கின்றன. இம்மூன்றும் ஒன்றுக்கொன்று சார்புநிலைத்தன்மையுடையவை.

நமது செயல்களைத் தீர்மானிக்கும் கருவியான மனதினை பக்குவப்படுத்தி இறைநிலையில் நிற்பதற்குரியதான பொறிமுறைகளை எடுத்துரைக்கும் தத்துவப்பரப்பாக இந்து சமயமானது திகழ்கின்றது.

மனிதனது பொதுப்புத்தியில் இந்து சமயம் என்பது வெறுமனே வழிபாட்டுமரபாகவே கருதப்பட்டுவருவதனால் இதற்குள் அமிழ்ந்திருக்கக்கூடிய ஆழ்ந்த தத்துவ விசாரங்களை உணர்ந்துகொள்ளக்கூடியதான சிற்றறிவு நம்மிடமில்லை என்பதே உண்மை.

உலகிலுள்ள எல்லாப்பிறப்புகளையும் விட மனித பிறப்பானது மகத்துவம் நிறைந்தது. மற்றைய பிறப்புகளுக்கில்லாத தனிச்சிறப்பு மனிதப்பிறப்பிற்குரியதாயிருப்பதற்கான காரணம் மனித பிறவி ஒன்றே ஆன்மாவின் இறுதி இலட்சியமான முக்திநிலையை எய்துவதற்கு அதாவது மீண்டும் பிறவாநிலையை அடைவதற்கான பிறப்பாகும்.

ஆனால் மண்ணுலகத்தில் நாம் இப்பிறவி எடுத்ததற்குரிய நோக்கத்தை மறந்து பொருளீட்டும் முனைப்பிலும் பணம் பதவிகளுக்காக அலைந்தும் அவமாகவே இப்பிறப்பைக் கழித்து வருகிறோம் என்பதே நிதர்சனமாகும்.

வேதாந்தங்கள், சைவசித்தாந்தங்கள், பகவத்கீதை, திருமுறைகள் மற்றும் திருமந்திரம் போன்ற எண்ணற்ற சித்தர் பெருமக்களின் பாடல்கள் முதலிய பல்வேறு இந்து தத்துவ நூல்களிலும் இது குறித்த கருத்துக்களை பரக்கக் காணலாம். இவை பற்றியெல்லாம் நாம் அதிகமாக, ஆழமாக சிந்திக்க முற்படுவதில்லை. மாறாக ஆலய வழிபாட்டுடன் மட்டும் எமது ஆன்மிக வாழ்க்கை முறையை முடித்துக்கொள்கிறோம்.



உண்மையில் இந்து தத்துவங்களுக்குள் இருக்கக்கூடிய ஆழ்ந்த தத்துவ உள்பொருள்கள் மற்றும் வாழ்வியல் நடைமுறைகள் எல்லாம் அர்த்தமுடையவை, அற்புதமானவை. இன்று எத்தனை பேருக்கு சைவத்திருமுறைகளை சரிவர ஓதக்கூடிய ஆற்றல் காணப்படுகின்றன? முன்னர் சிறு வயதினரிடையே சைவத்திருமுறைகளை மனனம் செய்து பிழைகளின்றி ஒப்புவிக்கக்கூடிய ஆற்றல் அதிகமாகக் காணப்பட்டமை கண்கூடு. அக்காலத்தில் கல்விச்சாலைகளில் மாணவர்களது திறமைகளுக்குக் களம் அமைத்துப் போட்டிப் பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டமை போன்று தற்காலத்தில் அவ்வாறான நிலைமை குறைவென்றே கூறலாம்.

மக்களின் வழிபாட்டு முறைகளுள் ஆலய வழிபாடு முதன்மை பெறுகின்றது. மக்களது வாழ்வியலுடன் நேரடித் தொடர்புபட்டதும் ஆன்மிக முன்னேற்றத்திற்குரிய சாதனமாக விளங்கும் ஆலயங்கள் தற்போது அவற்றின் செயற்பாடுகள், நோக்கங்களிலிருந்து வழுவி நழுவிச் செல்கின்றமை துரதிஷ்டமானது.இவைபெரும்பாலும்வருமானமீட்டுதலையே குறியாக கொண்டு செயற்பட்டு வருவதனால் அவற்றின் மைய இலக்குகள் அடிபட்டுப்போயுள்ளன.

நடைபெற்றுவரும் பெரும்பாலான ஆலய திருவிழாக்களை அவதானிக்கையில் மக்களிடத்தே பக்தியுணர்வைக் காண முடியவில்லை. மாறாக பொழுதுபோக்குக்கான களியாட்ட நிகழ்வுகளாகவே நடத்தப்படுவதனையும் பார்க்க முடிகின்றது. பணமீட்டலை மையமாகக்கொண்ட கோயில் நிர்வாகங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் பெரும்பாலான ஆலயங்களில் நிர்வாக ரீதியான பல்வேறு குழப்பங்கள், பிரச்சினைகள் தலைதூக்கி நீதிமன்றங்களிலும் வழக்குகள் நிரம்பி வருவதனையும் அவதானிக்க முடிகிறது.

அத்துடன் பெரும்பாலான கோயில் பூசகர்களும்கூட அவர்களுக்குரித்தான கடமைகளை சரிவர செய்வதனை மறந்து அதாவது ஆலயக் கிரியைகளை ஆற்றுகையில் விதிமுறைகளை தெரிந்தோ தெரியாமலோ புறம்தள்ளி பணமீட்டலை மட்டும்குறியாகக்கொண்டுசெயற்படுகின்றமைகவலைக்குரிய விடயமாகும்.

புராண இதிகாசங்கள் கூறுகின்ற கருத்தியலின் படி, கலியுகத்தில் மக்கள் மற்றும் பிராமணர்கள் எப்படி வாழ்வார்கள்? எப்படியிருப்பார்கள்? அவர்களது குணவியல்புகள் என்னென்ன? என்பவைபற்றியெல்லாம் தெளிவாக அலசப்பட்டிருக்கின்றது. காலமாற்றத்தின் படியே இவ்வாறெல்லாம் நடைபெறுகின்றதோவென எண்ணத்தோன்றுகின்றது. எனவேதான் இத்தன்மையான இழிநிலைகள் குறித்தெல்லாம் நாம் எவர்மீதும் குற்றம்காண விளைவது அபத்தமாகும். எல்லாமே காலம்செய்த கோலமே என்றெண்ணி வாளாதிருப்பதனைத் தவிர வேறு வழியில்லை.

- ஸ்ரீ நதிபரன் -

# கல்வி அழகே அழகு

அழகு என்பது புற அழகு இன்றி அக அழகையும் குறிப்பிடும். அந்த வகையில் தனது சருமத்தின் அழகை மட்டும் பேணி தனது மனத்தின் சுத்தத்தை பேணாதவர்களின் அழகு அழகாக கருதப்பட மாட்டாது. அவ்வாறு தமது மனதின் சுத்தத்தை பேணுவதற்கு சிறந்த கருவியாக விளங்குவது கல்வி ஆகும். அதனால்தான் கல்வியினால் பெற்ற அழகினையே சான்றோர் உண்மையான அழகு என்று குறிப்பிடுகின்றனர். நல் ஒழுக்கங்களைக் கற்று தருவதற்கு நமக்கு மிகவும் அவசியமான ஒன்றாக கல்வியே காணப்படுகின்றது.

இவ்வாறு திருவள்ளுவர் கல்வியின் சிறப்பு பற்றி பொய்யாமொழியில்

**'கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக'**

– என்று கூறுகின்றார். அதாவது ஒருவன் எவ்வளவு கல்வி கற்றிருந்தாலும் அவன் கற்றவழி ஒழுகவில்லையேல் அவன் கற்ற கல்வியானது சிறிதும் பயனற்றது என்றார். அதனால் நாம் கற்ற விடயங்களை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்த வேண்டடியது மிகவும் முக்கியமானதாகும். நாம் கற்ற விடயங்களை அடுத்தவர் விளங்கும்படி எடுத்துரைக்கும் போதே அது முழுமை பெறுகின்றது. அரசனிற்கு தான் ஆளும் இடம் வரை சென்றால் மட்டுமே சிறப்பு. ஆனால் கற்றோருக்கு தாம் செல்லும் இடமெல்லாம் சிறப்பு என குறிப்பிடுகின்றனர்.

இப்படி கல்விக்கும், கல்வி கற்றவர்க்கும் வழங்கப்படும் சிறப்பானது இன்று நேற்று வழங்கப்படும் சிறப்பன்று. சங்க காலம் தொட்டே பல கல்விமான்களும், சிறந்த பல புலவர்களும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்துள்ளனர். அதில் சிறந்த உதாரணமாக விளங்குபவர் கவியரசர் கம்பன் ஆவார். அவர் கவி ஆற்றல் மட்டுமின்றி கல்வி ஆற்றல் சிறந்தவராகவும் விளங்கினார். மன்னர்கள் பலரும், பல பல புலவர் மணிகளுக்கு அவர்களின் கல்வியாற்றலைக் கண்டு வியந்து எண்ணற்ற பரிசில்களையும் வாரி வழங்கியுள்ளனர். பண்டைய காலங்களில் கல்வி அறிவானது வாய் வழி மூலம், செய்முறை மூலமே கல்வியானது பரம்பரைக்கு பரம்பரை கடத்தப்பட்டது. அது மட்டுமின்றி சீடர்கள் குருவினுடைய ஆச்சிரமத்தில் தங்கி தமது கல்வி செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

இவ்வாறான நிலைமைகள் பண்டைய காலத்தில் காணப்பட்டதால் அனைவராலும் அந்த காலத்தில் கல்வியை பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக பெண்கள் கைகளில் பேனாவை எடுத்தாலே குற்றமென கூறும் சமூகம் அக்காலத்தில் நிலவி வந்தது.

அதன் பின் படிப்படியாக அந்த நிலைமை மாறி செல்வந்தர்கள் அனைவரும் கல்வியை பெறலாம் எனும் நிலை வந்தது. இப்படி இருக்கும் சந்தர்ப்பத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களால் இவ்வாறான நிலைமையில் கல்வியை பெறமுடியாத நிலைமை காணப்பட்டது. இவ்வாறான நிலையை இல்லாது ஒழிக்கவே இலங்கையில் தோன்றினார் இலவசக் கல்வியின் தந்தை கன்னங்கரா. இவரினால் இலங்கையில் இலவசக்கல்வி தோற்றம் பெற்றதால் அடிதட்டு மக்கள் முதல் பெரிய செல்வந்தர் வரை கல்வியினை



பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு கிடைத்தது.

கல்விச் செல்வமே உலகின் அழியாச் செல்வமாக போற்றப்படுகிறது. அதாவது, தீயினால் அழியாது, நீரினால் அழியாது. ஒருவன் எதை துறந்தாலும் இறுதி வரை அவனுக்கு கை கொடுக்கும். வரலாறுகளில் படித்த பெண்கள் 'மதுபாச்சிகா' என அழைக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றி 'சத்தரமலங்கார' எனும் நூலில் படிக்காதவர்கள் காட்டுப்பூவிற்கு ஒப்பானவர்கள். அதாவது பண்பற்றவராகக் கருதப்பட்டனர்.

இவ்வாறு கல்வியின் மேன்மை காணப்படினும் கல்வியறிவு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது. இதனையே முன்னோர்கள் 'ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது' என குறிப்பிட்டனர்.

**'கற்றதனால் ஆய பயன் என்ன
நற்றார் தொழார் எனின்'**

- அகிலாண்டேஸ்வர குருக்கள் அகிலரூபினி -
யாழ். இந்து மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

# இணையத்தைப் புயல் போலத் தாக்கிய காஷ்மீரின் பத்தே வயதுச் சிறுமி அக்சா





காஷ்மீரின் சோபூரைச் சேர்ந்த பத்து வயது சிறுமி ஒருவர் தனது சமூக ஊடக வீடியோக்களால் இணையத்தில் புயலை கிளப்பியுள்ளார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கின் இளைய சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர் என்று அறியப்பட்ட அக்சா மஸ்ரத் தனது வீடியோக்களைத் தவறாமல் பார்க்கும் நூறாயிரக்கணக்கான மக்களை கவர்ந்துள்ளார்.

அந்த இளம் பெண் தனது சொந்த மாநிலத்தின் இயற்கை அழகு பற்றிய வீடியோக்களை மட்டுமல்லாமல், ஒரு சில சமூக அக்கறைகள் பற்றிய வீடியோக்களையும் முன்வைக்கிறார்

ஷா ரசூல் மெமோரியல் வெல்கின் சோபோரின் மாணவி அக்சா தனது முதல் வீடியோவை உருவாக்கியபோது அவருக்கு 6 வயது. அவரது முதல் வீடியோ 'சில்லைக் கல்லன்' – காஷ்மீரில் நாற்பது நாள்கள் நீடிக்கும் குளிர்காலத்தில் பற்றியது.

இந்த வீடியோவைப் பற்றி அக்ஸா கூறுகையில், என்னுடைய வயதுடைய குழந்தைகள் அதை ரசித்து, நிஜ வாழ்க்கை நிகழ்வோடு இணைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், அதனால் சில்லைக் கல்லனைப் பற்றிய வீடியோவைத் தயாரிக்க முடிவு செய்தேன்... இது எனது முதல் சீரற்ற வீடியோ. பொதுமக்களிடமிருந்து எதிர்பாராத பதிலைக் கண்டது. அதனால் மேலும் இதுபோன்ற வீடியோக்களை உருவாக்க நான் ஊக்குவிக்கப்பட்டேன். – என்றார்.

இளம் திறமையான அவர் இதுவரை 50 வீடியோக்களை உருவாக்கியுள்ளார் மற்றும் அவரது பயணத்தில் பார்வையாளர்களிடமிருந்து பெரும் ஆதரவையும் அன்பையும் பெற்றுள்ளார்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, அக்ஸா அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய வீடியோக்களைப் பதிவு செய்வது மட்டுமல்லாமல், தனது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளைக் கவனத்தை ஈர்க்க தனது சமூக ஊடகங்களையும் பயன்படுத்துகிறார். பயிர்கள் எவ்வாறு வளர்க்கப்படுகின்றன மற்றும் அறுவடை செய்யப்படுகின்றன என்பதை விளக்கும் வீடியோக் களையும் அவர் உருவாக்கி



யுள்ளார்.

சோப்பூர் பழம் மண்டி, நெல் அறுவடை, கங்கிரி போன்ற எனது வீடியோக்களுக்கு லட்சக்கணக்கில் பார்வைகள் கிடைத்துள்ளன. உண்மையில், எனது வீடியோக்களில் ஒன்றான 'மேரே மாமு கி ஷாதி'க்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றுள்ளேன். எனது வீடியோக்களுக்கு மக்கள் பாராட்டுகளைப் பொழிகிறார்கள், என்று அக்சா கூறினார்.

வளர்ந்து வரும் செல்வாக்குக் கொண்ட அவர் தற்




போது 5 ஆம் வகுப்பு படித்து வருகிறார். மேலும் பலர் அவரது வேலையை விரும்பினாலும், அவர் சுற்றியுள்ள மக்களிடமிருந்து சில பிரச்சினைகளை எதிர்கொண்டார்.

தனது பயணத்தில் தனது குடும்பத்தினர் தனக்கு எப்படி உதவினார்கள் என்பதை நினைவுகூர்ந்த அக்சா, என்னைச் சுற்றி பல பேர் என்னை மேம்படுத்தியிருக்கிறார்கள், ஆனால் வீடியோக்களை உருவாக்கும் போது, சர்வதேச அளவில் புகழ்பெற்ற புகைப்பட ஜர்னலிஸ்டாக இருக்கும் எனது மாமாவிடமிருந்து (மாமு) எனக்கு உத்வேகம் கிடைத்தது. – என்றார்.

அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் 'வாட் அக்சா சேஸ்' இல் 58 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ளார். அத்தோடு அவர் எதிர்காலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக விரும்புகிறார்.

**( மூலம்: ஏ.என்.ஐ.)**

# இந்தியாவின் இரு நூறு ரயில் நிலையங்கள் உலகத் தரத்துக்கு விரைவில் உயர்த்தப்படும்

## ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் உறுதி தெரிவிப்பு





இந்தியா முழுவதும் உள்ள 200 ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் திங்கட்கிழமை தெரிவித்தார்.

மத்திய மகாராஷ்டிராவில் உள்ள அவுரங்காபாத் ரயில் நிலையத்தில் ரயில் பெட்டி பராமரிப்பு தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார்.

“47 ரயில் நிலையங்களுக்கான டெண்டர் விடும் பணி முடிவடைந்த நிலையில், 32 ரயில் நிலையங்களில் பௌதீகப் பணிகள் தொடங்கியுள்ளன.” –என்று கூறினார் அவர்.

ரயில்வே கட்டமைப்பு ரீதியாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது என்றார் அவர்.

இரு நூறு ரயில் நிலையங்களைச் சீரமைக்க அரசு 'மாஸ்டர் பிளான்' தயாரித்துள்ளது. குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு வசதிகள் தவிர, காத்திருப்பு ஓய்வறைகள், உணவு விடுதிகள் உள்ளிட்ட உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் மேல்நிலைத் தளங்களைக் கொண்ட இடங்கள் உருவாக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

பிராந்திய தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான 'தளமாக' ரயில் நிலையங்கள் செயல்படும் என்றும் திரு.வைஷ்ணவ் கூறினார்.

வந்தே பாரத் ரயில்கள் தயாரிப்பில் மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியின் பங்களிப்பு குறித்து பேசிய அமைச்சர் நாட்டில் எதிர்காலத்தில் 400 'வந்தே பாரத்' ரயில்கள் இருக்கும், அவற்றில் 100 ரயில்கள் மரத்வாடவின் லத்தூரில் உள்ள பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். தொழிற்சாலையில் தேவையான மாற்றங்கள் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது, மூன்று வந்தே பாரத் ரயில்கள் இயக்கத்தில் உள்ளன. மற்றும் சமீபத்திய ஒன்று, மும்பை சென்ட்ரல் காந்திநகர் இடையே, கடந்த வாரம் தொடங்கப்பட்டது.



மேம்படுத்தப்பட்ட வந்தே பாரதத்தின் முதல் பெட்டிகள் லத்தூரில் உள்ள மராத்வாடா ரயில் பெட்டி தொழிற்சாலையில் இருந்து 13 முதல் 14 மாதங்களில் வெளிவரும் என்றார் அமைச்சர்.

புதிதாக தொடங்கப்பட்ட வந்தே பாரத் ரயில்கள் இந்தியாவிற்கு வெளியேயும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவே அவற்றுக்கு தேவையான பெட்டிகள் மராத்வாடா தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முடிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலையில் 1,600 பெட்டிகள் தயாரிக்கப்படும் என்று திரு வைஷ்ணவ் கூறினார்.

லத்தூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலை, மராத்வாடாவின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும், அதன் காரணமாக, பிற தொடர்புடைய திட்டங்களும் அமைக்கப்பட்டு, பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

ஒரு திட்டத்தை அனுமதிப்பதற்கான 'வருமான விகிதம்' தொடர்பான காரணத்தை அரசாங்கம் கருதவில்லை என்று திரு.வைஷ்ணவ் கூறினார்.

'பிரதமரின் கதி சக்தி' திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் நெடுஞ்சாலைகள் அல்லது ரயில்வே மூலம் இணைக்கப்பட்டு வருகின்றன எனவும், மராத்வாடாவின் சில பகுதிகளும் இணைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அவுரங்காபாத்தில் உள்ள ரயில் பெட்டி பராமரிப்பு வசதி 18 பெட்டிகள் திறன் கொண்டது, ஆனால் மகாராஷ்டிர சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அம்பாதாஸ் டான்வே, இந்த திறனை 24 பெட்டிகளுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று கோரினார்.

தன்வேயின் கோரிக்கையை பரிசீலனை செய்து அடுத்த 15 நாள்களில் முன்மொழிவை அனுப்புமாறு திரு வைஷ்ணவ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே இணை அமைச்சரும், ஜல்னா எம்.பி.யுமான ராவ்சாகேப் தன்வே, மத்திய அரசு மகாராஷ்டிராவுக்கு 1,100 கோடி ரூபாவாக இருந்ததை 11,000 கோடி ரூபாவாக அனுமதித்துள்ளது என்றார்.

புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அவுரங்காபாத் – புனே விரைவுச் சாலையில் அதிவேக ரயில் திட்டங்களை மேற்கொள்ள மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பகவத் காரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவுரங்காபாத் எம்.பி. இம்தியாஸ் ஜலீல், மராத்வாடா போன்ற பகுதிகளுக்கான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும் போது ஆர்.ஓ.ஆர். நிபந்தனையை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கோரினார்.

லத்தூர் மக்களவை எம்.பி சுதாகர் ஷ்ரங்கரே மற்றும் முன்னாள் மாநில அமைச்சர் சம்பாஜி பாட்டீல் நிலங்கேகர் ஆகிய இரு பா.ஜ.க உறுப்பினர்களும் திரு வைஷ்ணவ் மற்றும் ஜூனியர் ரயில்வே அமைச்சர் ராவ்சாகேப் தன்வே ஆகியோருக்கு லத்தூருக்கு ரயில் பெட்டி தொழிற்சாலை கிடைத்ததற்கு நன்றி தெரிவித்தனர்.

திரு நீலங்கேகர் கூறுகையில், ரயில் பெட்டி தொழிற்சாலைதான் மஹாராஷ்டிராவில் முதல் வசதியாக உள்ளது. – என்றார்.

**(மூலம்:என்.டி.ரி.வி.)**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 142

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## விநாச கால விபரீத புத்திகள்

விநாசம் வரும் காலத்தில் புத்தி பேதலித்து விபரீத வழியில் விடயங்களை முன்னெடுக்கத் தூண்டுமென நேற்றைய 'காலைக்கதிரின்' தலையங்கத்தில் வெளிவகார அமைச்சர் அலி சப்ரி சர்வதேசத்திற்கு 'தங்களுக்குப் பாடம் புகட்ட வேண்டாம்' என ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பேசியமையைப் பற்றி கருத்திடப்பட்டிருந்தது.

இதைப் படிக்கும் போது விடுதலைப் புலிகள் கூட தங்களுக்குச் சர்வதேச பாடம் எடுக்கத் தேவையில்லை, ஸ்ரீலங்காவை எப்படி கையாள்வது என தெரியும், இவ்வளவு அடிகள் போட்டமையால் இப்பொழுது வாரத்துக்கு இரண்டு கடிதங்களோடு ஓடி வருகிறார்கள், இன்னும் நாலு அடி போட்டால் தாங்களாகவே சரி வருவார்கள் என்ற மனப்பாங்குதான் மேலோங்கி நின்றது. ஒரு தீர்வை எட்ட தாங்கள் தங்களது புலம்பெயர் மக்களுடன் கலந்தாலோ சித்தல் வேண்டும், தரப்பட்டவை மிகவும் குறைந்தபட்சமே, அவை ஏற்றுக் கொள்ள முடியாதவை என்ற முடிவில்தான் அவர்கள் இருந்தார்கள்.

ஆயின் அவற்றையே சிங்கள ஊடகங்கள் தரப்பட்டவை நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் எனவும் தெரிவித்து,சிங்கள உரிமைக் கட்சி (சிஹல உறுய), ஜே.வி.பி. போன்றவை அதற்கு எதிரான போராட்டங்களை அறிவித்தன. அதே நேரம் டக்ளஸ் தேவானந்தாவோ இந்த இடைக்கால நிர்வாகத்திற்கு எதிராகத் தாங்கள் நீதிமன்றம் செல்வோம் என 29 ஜூலை 2003 டெய்லி மிரர் பத்திரிகைக்குப் பேட்டி தந்தார்.

நோர்வேயோவிடுதலைப்புலிகளின் அரசியல் பகுதிப் பொறுப்பாளர் தமிழ்செல்வனும், அவர் நியமித்த சகாக்களும், ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் சென்று புலம் பெயராளர்களுடன்சந்திப்பதற்கானதேவைகளை நிறைவேற்றிக் கொடுத்து, அதே சமயம் தென்னாபிரிக்காவில் அந்த நாட்டு மக்கள்இனத்துவசத்தைஎதிர்கொள்ளக் கடைப்பிடித்த முறைகளையும் அறிந்து கொள்ள அங்கும் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இந்த ஏற்பாடுகள் – முக்கியமாக தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸுடனும் மண்டேலாவுடனும் தமிழ் மக்கள் போராட்டத்தை இணைத்து, அவர்களோடு சந்திப்புகளை ஏற்படுத்தியது. இவை ஸ்ரீலங்காவிற்கு பலத்த கோபங்களைத் தந்தது. ஆயினும், நோர்வே அனுசரணையாளர்களோ விடுதலைப் புலிகள் சர்வதேசங்களில் ஆழமாக ஈடுபட்டு, சர்வதேசத்தின் எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பினார்கள். ஆனால் அவர்கள்(புலிகள்) மேய்ந்ததோ தங்கள் கொல்லைப் புறங்களில்தான்.

இப்படியாக நடத்தப்பட்ட சந்திப்புகளில் மதியுரைஞருக்கு எதிவித பங்குகளும் தரப்படவில்லை. அவரும் மௌனமாகவே இருந்தமை பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளர்களுக்கு ஆதங்கத்தை தந்தது. அது மட்டுமல்லாமல், விடுதலை புலிகளும், மதியுரைஞரும் கூட, அவரது உடல் நிலையையே காரணம் காட்டியமையும், புலம்பெயர் ஆதரவாளர்களின் கைகள் ஓங்கி, அவர்கள் பேசிக் கொண்ட தீவிரம் கொண்ட பாதைகள் கலக்கங்களைத் தந்தன.

விடுதலை புலிகளுக்கு ஆதரவில் இருந்த புலம்பெயர் சமூகம் 'ஒரு கை பார்க்கத்தான் வேண்டும் நாங்கள் இருக்கிறோம்' என்ற உத்வேக வார்த்தைகளை அள்ளித் தர சர்வதேசம் தங்களுடனேயே இருக்கிறார்கள் என விடுதலை புலிகளும் கட்டுமரத்தில் கடல் கடக்கத் தீர்மானித்தார்கள்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தரப்பட்ட குறைந்தபட்ச இடைக்கால நிர்வாக அமைப்புக்குப் பதிலாக விடுதலை புலிகள் அதியுச்சமான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி, அதனைத் திட்டமாகக் கையளிக்கத் தீர்மானித்தமையால், ஜப்பானில் ஜூன் 9,10 ஆம் திகதிகளில் நடந்த சர்வதேச நாடுகளின் சம்மேளனத்தில் அவர்கள் பங்குபற்றவில்லை. மறுத்தனர்.

சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும், 22 சர்வதேச அமைப்புகளும் இதில் பங்கு பற்றி 450 கோடி டொலர்களை உதவுவதற்கு இணங்கியமையோடு, அந்த நிதியத்தின் பொறிமுறைகளுக்கும், சமாதான பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்யவும், மூன்று துணைத் தலைமைகளையும் – ஜப்பானிலிருந்து யசூஷி அகாசி, அமெரிக்கா– விலிருந்து ரிச்சர்ட் ஆர்மிடேஜ், ஐரோப்பிய பிராந்தியத்தில் இருந்து கிரிஸ் பட்டன் என்பவரையும் நியமித்தது.

### ஜப்பான் சம்மேளனத்தின் தீர்மானங்கள்

சர்வதேச நாடுகள் தரும் உதவிகள், ஸ்ரீலங்காவும் விடுதலை புலிகளும் ஏற்றுக்கொண்ட ஒஸ்லோத் தீர்மானத்துக்கு அமைவாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை எவ்வளவுக்கு முன்னெடுக்கின்றன என்பதைக் கணித்தே தரப்படும், அதற்காக இரண்டு பகுதியினரும் காலம் தாழ்த்தாது இடைக்கால நிர்வாக அலகை அமைத்து, நிரந்தரத் தீர்மானம் வரும் வரையில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்றவற்றை நிறைவேற்ற வேண்டும், அதே சமயம் மிகக் குறுகிய காலத்தில், விரைவு படுத்தப்பட்டு நிரந்தர சமாதானத்தை அடையும் வழி காணும் வரைபடத்தை ஆக்கிக் கொண்டு, அந்த வரைபடம் கட்டம் கட்டமாக முன்னேறுகின்றதா என்பதை கவனிப்பதற்காக சர்வதேச சமூகம் பின்வருவனவற்றை உற்று நோக்கத் தீர்மானித்தது. அவை:–

போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு பகுதியினராலும் முறையாக – முழுமையாக –கடைப்பிடிக்கப்படுவது, வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வுக் கட்டமைப்புகளைஉடனடியாகச்செயல்படுத்துவது, ஆயுதப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனத் தீர்வுகள், யாவரினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது, ஆண் – பெண் சமத்துவத்தை மேம்படுத்தி அவர்கள் சமத்துவமாக புனர்நிர்மாணக் கட்டமைப்புகளில் பங்கு பற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, ஐ.நா. கட்டமைப்புகளின் கோட்பாடுகளுக்கு அமைய வயது குறைந்தோர் ஆயுதம் தாங்கிப் போராடுவதிலிருந்து விலக்கப்பட்டு மீண்டும் சமுதாயத்தோடு இணையும் வழிமுறைகளை நெறிப்படுத்துவது, ஸ்ரீலங்கா அரசும் விடுதலை புலிகளும் தாங்கள் ஏற்றுக் கொண்ட வரைமுறைகளில் இராணுவங்களைக் குறைத்து, இராணுவமயமாக்கலை நிறுத்துவதற்குமான வழிகளுக்குரிய இணக்கத்தை ஆக்குதல், போரில் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கும் வடக்கு கிழக்கின் பொதுமக்களுக்கும் மன உளைச்சல் சம்பந்தமான விடயங்களில் புதிய உதவிகளை தருவது என்பவை அவற்றில் அடங்கின.

இந்தத் தீர்மானங்கள் தமிழ் மக்களை மையப்படுத்தி, அவர்களுக்கு அவை பயன் தருமோ என்பவை கணக்கெடுக்கப்பட்டதோ என்னவோ, விநாச காலே விபரீத புத்தி என்ற வழியில் விடுதலைப் புலிகள் 23 ஜூன் 2003 தாங்கள் ஏற்படுத்தப்பட்ட அத்தீர்மானங்களையோ ஏற்கப் போவதில்லை எனவும், அவை எது விதத்திலும் தங்களை கட்டுப்படுத்தா எனவும் அறிக்கை தந்தனர். தங்களைக் கலந்து கொள்ளாமலேயே அந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனவும், ஸ்ரீலங்கா அரசு சமாதான அனுசரிமையாளர்களின் ஒத்துழைப்போடு, தீர்வுகளுடன் சம்பந்தப்படாத ஆனால் அவர்களுக்குத் தேவையான சில சக்திகளை (அதாவது அமெரிக்காவை)உள்வாங்கி இவற்றை நடத்துகிறது, இது உண்மையாக ஓர் உள்நாட்டுச் சச்சரவு, அதனை ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தங்களுக்கிடையே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தெளிவான செய்தி இருந்தது.

புலிகள் இந்தியாவுடன் மோதும் போதும் பிரேமதாஸாவுடன் பங்காளியான போதும் இதுவே சொல்லப்பட்டது.

### விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அலகு

இந்திய ஒப்பந்தத்தின் பல சாரங்களுடன் அதிகாரப் பரவல் பற்றி இணக்கப் பேச்சு வார்த்தைகளில் சமர்ப்பிக்கப்பட்டவைகளையும் இணைத்து, அதி உச்ச அதிகாரப் பரவல் விடுதலைப் புலிகளால் கட்டுப்படுத்தப்படுவதான கட்டமைப்பு வடக்கு – கிழக்கு முழுவதற்குமாக அமைத்துக் கையளிக்கப்பட்டது. அதில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்கள் யாவும் அதிகாரங்களுக்காக இந்த கட்டமைப்பில் அடங்கின. அந்த மாவட்டங்களின் எல்லாவித அதிகாரங்களும் இந்த கட்டமைப்பின் கீழ் வந்தாலும், அதனை ஸ்ரீலங்கா அரசு நியமிக்க, அதில் விடுதலை புலிகளும் முஸ்லிம் அங்கத்தினர்களும் முதல் ஐந்து வருடங்களுக்கு பதவி வகித்து, அதன் பின்னர் தேர்தல் ஊடாக தேர்வு செய்யப்பட வழி வகுத்தது.

ஸ்ரீலங்கா அரசு இந்தக் கட்டமைப்பை நியமித்தாலும், அதில் பெரும்பான்மை விடுதலைப் புலிகளுக்கே இருந்து. அவர்களே தலைவரையும் நடைமுறை அதிகாரிகளையும் தெரிவு செய்வார்கள் என உப விதிகள் தெரிவித்தன. அதன் விவரங்கள் வெளிவந்தவுடன் சிங்கள ஊடகங்கள் எரிகின்ற வீட்டுக்கு எண்ணெய் ஊற்றின. 'லங்காதீப' அதனது 5 நவம்பர் 2003 பதிப்பில் 'ஓநாய்கள் கோழிக்குஞ்சுகளைப் பாதுகாக்குமாம்' எனத் தலையங்கம் தீட்டியது. 'திவயின' 03 நவம்பர் 2003 'விடுதலைப் புலிகளுக்கு பிரிவினை என்பதை தவிர வேறு தீர்வு தெரிவதில்லை' – என்று எழுதியது. அதே நாளில் வீரகேசரி முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் விடுதலைப் புலிகளின் கட்டமைப்பில் கணக்கெடுக்கப்படவில்லை என எழுத, மற்றைய தமிழ் ஏடுகளோ இந்தக் கட்டமைப்பை கணக்கெடுக்காவிட்டால் நாடு பிரிவது தவிர்க்க முடியாததாகிவிடும் என வரைந்தன. இந்தக் கட்டமைப்பின் தன்மைகளையும், அதனை ஆக்கியோரையும் நாளை பார்க்கலாம்

(வளரும்...)


# முருகபூபதியின் 'நடந்தாய் வாழி களனி கங்கை' ஆங்கிலத்திலும் வெளியீடு மெய்நிகரில் நாளை

## 'The Mystique of Kelani River' தலைப்பில் வருகிறது













கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியாகும் 'அரங்கம்' பத்திரிகையில் முன்னர் தொடராக வெளிவந்த எழுத்தாளர் முருகபூபதி எழுதிய 'நடந்தாய் வாழி களனி கங்கை' ஆக்கம் 2021 ஆம் ஆண்டு கொழும்பு குமரன் புத்தக இல்லத்தினால் நூலாக வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கு அரங்கம் ஆசிரியர் சீவகன் பூபாலரட்ணம் அணிந்துரை எழுதியிருந்தார்.

கொழும்பை ஊடறுத்து ஓடும் களனி கங்கையின் கரையோரம் நிகழ்ந்த அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை கதைபோன்று சித்திரித்த இந்த நூலை, ஆஸ்திரேலியா மெல்பனில் வதியும் மொழிபெயர்ப்பாளர் திரு. நூர் மஃரூப் முகம்மட் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

குறிப்பிட்ட ஆங்கில மொழிபெயர்ப்பினை தற்போது அமேசன் கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

நூர் மஃரூப் முகம்மட், ஏற்கனவே முருகபூபதியின் சில ஆக்கங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவை **Colombo Telegraph** இணைய இதழிலும் வெளியாகியிருக்கின்றன.

அத்துடன் நூர் மஃரூப் முகம்மட், கவியரசு கண்ணதாசனின் வனவாசம் நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். எனினும் பதிப்புரிமை விவகாரங்களினால், இந்நூல் வெளியாவதில் தாமதம் நீடிக்கிறது.

**The Mystique of Kelani River** என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும் நடந்தாய் வாழி களனி கங்கை நூல் நாளை ஒக்டோர் மாதம் 08 ஆம் திகதி சனிக்கிழமை, ஆஸ்திரேலியா மெல்பன் – சிட்னி நேரம் இரவு 8.00 மணிக்கும் (குவின்ஸ்லாந்து – இரவு 7.00 மணி, மேற்கு ஆஸ்திரேலியா மாலை 5.00 மணி) , இலங்கை – இந்திய நேரம் பிற்பகல் 2.30 மணிக்கும் இங்கிலாந்து நேரம் முற்பகல் 10.00 மணிக்கும் மெய்நிகரில் வெளியிடப்படும்.

இதர நாடுகளில் நேரம் விவரம்:–

ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே:– முற்பகல் 11.00 மணி.

நியூசிலாந்து:– இரவு 10.00 மணி.

கனடா:– காலை 5.00 மணி.

மனித உரிமை ஆர்வலரும் எழுத்தாளருமான கலாநிதி லயனல் போப்பகேயின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் எழுத்தாளரும், சமூகப்பணியாளருமான திரு. எஸ். சுந்தரமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்துவார். சட்டத்தரணிகள் திருமதி நிவேதனா அச்சுதன், ஆரூரன் ரவீந்திரன் மற்றும் திருமதி றிஸானா சுபைர் சக்கரியா, மொழிபெயர்ப்பாளர் திரு. நூர் மஃரூப் முகம்மட் ஆகியோர் உரையாற்றுவர்.

மூல நூலின் ஆசிரியர் திரு. முருகபூபதி நன்றியுரை நிகழ்த்துவார்.

ஆஸ்திரேலியா – கன்பரா தமிழ் அரங்கம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

**மெய்நிகர் இணைப்பு :-**
**Join Zoom Meeting**
**https://us02web.zoom.us/j/84272509206?pwd=NW5OTTVmbkN1U002T1NzcFJET2pCQT09**
**Meeting ID: 842 7250 9206**
**Passcode: 005941**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா














## மோதவிட்டுக் குளிர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த கடற்பகுதிகளில் சீனா நேரடியாக அட்டைப் பண்ணைகளை அமைக்க முயற்சிகள் மேற்கொண்ட போதும் பல்வேறு தரப்புக்களில் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில் சீனா மறைமுகமாக கொழும்பு நிறுவனங்கள் ஊடாக முதலீடு செய்துவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வளமான எமது குடாக்கடலின் பல ஏக்கர் பரவைக் கடல் பகுதிகளை முறையற்ற விதத்தில் அட்டைப் பண்ணைகள் அமைத்து வருவதாக அறிகிறோம்.

இயற்கையாகவே மீனினங்கள் இனப்பெருகத்திற்கேற்ற கண்ட மேடை பிரதேசங்களை தன்னகத்தே கொண்ட எமது குடாக்கடல் இயற்கையாகவே இறால் உற்பத்திபெருகும் இடங்களாகவும் காணப்படுகிறது.

இப் பிரதேசங்களில் அட்டைப்பண்ணைகளை அமைத்து கடல் நீரோட்டங்களை தடுத்து எமது கடலை நாசப்படுத்தும் செயற்பாட்டை சீனா மேற்கொள்வதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

சீனாவின் இத்தகைய செயற்பாட்டினால் மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான விட்டமின் மற்றும் ஊட்டச்சத்து மிக்க கடல் உணவைப் பெற முடியாத சமூகமாக எம்மை அழிப்பதற்கு சீனா முயல்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

அதன் ஆரம்ப புள்ளியாக பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சிப் பகுதியில் சீன முதலீட்டு பின்னணியில் பண முதலைகளினால் ஆரம்பிக்கப்பட்ட பண்ணையால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் அழியும் நிலையில் உள்ளது.

அதுமட்டுமல்லாது குறித்த பகுதிகளில் பணத்தை வாரி வழங்கி, முறையற்ற அட்டைப் பண்ணைகளை நிலை நிறுத்துவதற்காக போராட்டங்களை தூண்டிவிடும் செயற்பாடுகளை இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறான போராட்டக்காரர்களால் மீனவ சமூகம் இரண்டாகப் பிளவுபட்டு ஒருவரை ஒருவர் மோதிக் கொள்ளும் நிலையை சீனா உருவாக்கித் தனது இருப்பை தக்க வைக்க முயல்கிறது.

30 வருட யுத்தத்தின் பின்னர் முழுமையாக பொருளாதார ரீதியாக கட்டி எழுப்பப்படாத வடபகுதி மீண்டும் சீனாவின் அபிவிருத்தி என்ற யுத்தத்தினால் அழிவடையும் நிலைக்கு தள்ளப்படுகிறது.

மேலும் சீனா அரசாங்கத்தால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக வருகை தந்து வழங்கப்பட இருந்த 4.3 மில்லியன் ரூபாவை ஏற்க மாட்டோம் என எதிர்ப்பு தெரிவித்தோம்.

இந்நிலையில் கொழும்பில் இருக்கும் சீனத் தூதரகம் தந்திரமான முறையில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சற்குணராஜாவை கொழும்புக்கு அழைத்து நிதியை வழங்கியமை நாகரிகமற்ற செயற்பாடாகப் பார்க்கிறோம்.

வடக்கு, கிழக்கில் இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் பல்கலைக்கழக மாணவர்கள் என பல ஆயிரம் பேர் இன்றும் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு சீனா உதவி செய்யவில்லை.

சீனா தற்போது உதவி என்ற போர்வையில் வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளுக்குள் ஊடுருவுவது ஏதோ ஒரு சதித் திட்டத்தை தனக்கு சாதகமாக நிகழ்த்துவதற்கு முன்னகர்வதாகவே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகிய நாங்கள் பார்க்கிறோம்.

எமது கடல் எமக்குச் சொந்தமான நிலையில் அட்டைப் பண்ணை என்ற போர்வையில் மீனவ மக்களையும் எமது கடலையும் சீனா கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே தமிழ் மக்களை பொருளாதார நீதியில் அழிப்பதற்காக ஆயுதம் இல்லாத யுத்தத்தை சீனா மேற்கொள்ளுமாயின் மீனவ மக்களுடன் சேர்ந்து எமது கடல் வளத்தைப் பாதுகாக்கப் போராடத் தயங்க மாட்டோம் என கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனிவாத் தீர்மானம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாக்கெடுப்பில் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கலந்துகொள்ளாமை சர்வதேச ரீதியில் கவனிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொலிவியா, சீனா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசூலா ஆகிய 7 நாடுகளும் பிரேரணை க்கு எதிராக வாக்களித்திருந்தன.

அத்துடன், பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து, கொரியா, உக்ரைன், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 20 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

இந்த வாக்களிப்பில், இந்தியா, ஜப்பான், பிரேசில், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட 20 உறுப்பு நாடுகள் கலந்துகொள்ளவில்லை.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் சிறிலங்கா தொடர்பான பிரேரணையைத் தயாரித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு முன்னரான நிகழ்வில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கருத்துவெளியிட்டிருந்தார்.

அதில் சிறிலங்கா மீதான போர்க் குற்றங்களுக்கு உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் தீர்வுகாண எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்றி தெரிவித்திருந்தார்.

## 22ஆம் திருத்தம் மீதான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

அதேவேளை, 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் இறுதி நிலைப்பாடு குறித்து ஆராய்ந்து விரைவில் அறிவிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு நேற்று ஜனாதிபதியால்ல் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

22 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடான நிலைப்பாட்டை எடுத்து வரும் நிலையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, 22ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்து எதிர்க்கட்சிக்கு சென்ற குழு ஒரு கருத்தையும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றொரு கருத்தையும் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளன.

22ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதன்முதலில் எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாற்றமான நிலைப்பாட்டை இப்போது எடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சுமந்திரன், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், நானும், சாணக்கியனும் நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக நேற்றைய தினம் நண்பகல் நாடாளுமன்றத்தில் இருந்து வெவ்வேறு வாகனங்களில் வெளியேறியிருந்தோம்.

இதன்போது எம் இருவரையும் மோட்டார் சைக்கிள் ஒன்று பின்தொடர்ந்து வருவதனை எங்களது பாதுகாப்பு அதிகாரிகள் அவதானித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட EP BEY 2600 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஒன்றே எம்மை பின்தொடர்ந்து வந்தது. இதுதொடர்பில் எமது பாதுகாப்பு அதிகாரிகள் கறுவாக்காடு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி அலோக்க பண்டார சிறிது நேரத்திற்கு பின்னர் எங்களது பாதுகாப்பு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு எங்கள் விடயங்களைக் கையாளும் பொறுப்பளிக்கபட்ட புலனாய்வாளர்களே எங்களைப் பின்தொடர்க்கின்றனர் எனத் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் எங்கள் இருவர் சார்பிலும் நான் இந்த இடத்தில் முக்கிய கேள்வி ஒன்றினை முன்வைக்க விரும்புகின்றேன். எதிர்கட்சியில் உள்ளவர்களை ஏன் புலனாய்வாளர்கள் பின்தொடர்கின்றனர்

புலனாய்வாளர்களுக்கு எவ்வாறு கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார்கள் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்கின்ற கேள்வியினையும் நான் முன்வைக்கின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றேன். இவ்வாறான செயற்பாடுகளினால் எங்கள் இருவரது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சம்பந்தனை இழிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரின் சிறப்புரிமையை மீறினார் என்பதனை ஏற்றுக்கொண்டமையோடு, அந்த ஒளிநாடாவில் வரும் குரலும் தன்னுடையது என ஏற்றுக்கொண்டார். அது தொடர்பில் தனது கவலையை வெளியிட்டு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் மன்னிப்புக் கோரினார்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடிய ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் இந்த முறைப்பாட்டிற்கான விசாரணை நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை தான்னால் மீறப்பட்டுள்ளது என்பதைக் குறித்த நபர் இங்கு ஏற்றுக் கொண்டமையால் இரு தரப்பினரின் இணக்கத்துக்கு அமைய பொது வெளியில் ஊடகசந்திப்பின் மூலம் மன்னிப்பு கோர வேண்டும் என்ற நிபந்தனையுடன் குறித்த சம்பவம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதேநேரம் இந்த ஒளிப்பதிவை வழங்கியவர் யார் என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அதை வழங்கினார் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக்கோரி பிரசித்தமான பத்திரிகையொன்றிலும் சம்பந்தப்பட்ட முகப்புத்தகத்திலும் அறிக்கை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் விசாரணையை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அந்த நபர் விடுவிக்கப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது பொதுவாக நாடாளுமன்றம் தொடர்பில் அவதூறாகக் கருத்துக்களை வெளியிட்டால் நாடாளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கும் உரிமை நாடாளுமன்றத்துக்கும், உயர் நீதிமன்றத்துக்கும் காணப்படுவதாகக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் எச்சரிப்பதற்கு அல்லது ஆறு மாதங்கள் நாடாளுமன்ற வளாகத்துக்குள் உள்நுழைவதைத் தடுப்பதற்கான அதிகாரம் இருப்பதாகவும், ஏதாவது தவறு இழைக்கப்பட்டிருப்பதாக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டால் அதனை உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் எனத் தலைவரினால் மேலும் தெரிவிக்கப்பட்டு செய்தியை வெளியிட்டவர் விடுவிக்கப்பட்டபோது அந்த ஒளிநாடாவை வழங்கியவருக்கு என்ன நடவடிக்கை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனைக்கு அழைப்பாணை அனுப்ப விஜயதாஸ ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



## லொறி கவிழ்ந்ததில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். திம்புல பத்தனை பொலிஸார் இத்தகவலைத் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராவணகொட விஜயபாகு கந்த, மெதகம்மெத்த பிரதேசத்தில் வசிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அட்டன் டிப்போவில் நடத்துனராக கடமையாற்றும் பி. ஜகத் ஜெயானந்த பண்டார (வயது 48) இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

அட்டனில் இருந்து மெதகம்மெத்த பிரதேசத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக மணல் மற்றும் கூரைத் தகடுகளை ஏற்றிச் சென்ற லொறியைச் சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியில் பின்நோக்கிச் சென்ற நிலையில்,த. அது வீதியின் குறுக்கே குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நடத்துனர் பணி முடிந்து வீடுதிரும்புவதற்காக லொறியின் பின்பகுதியில் பயணித்த போது, லொறியில் பின்நோக்கி சென்று குடைசாய்யும் வேளையில் இவரின் மீது அதிலிருந்த கூரைத் தகடுகள் விழுந்ததில் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டிமாவட்டவைத்தியசாலைக்குகொண்டு சென்றுள்ளனர.

விபத்தில் லொறியின் சாரதி மற்றும் சாரதி உதவியாளரும் காயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மல்தெனிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புல பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மணலாறில் 15 ஆயிரம் ஏக்கரை பிடுங்க இரகசியக் காய்நகர்த்தல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 கிராம சேவகர் பிரிவுகளையும் வெலிஓயாவுடன் சேர்க்க 2018 ஆம் ஆண்டு இரகசிய திட்டம் வகுக்கப்பட்டபோது நல்லாட்சி அரசிற்கு எதிராக கூட்டமைப்பு குரல் கொடுத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இதன் பின்னர் 2020 ஆம் ஆண்டிலும் இரகசிய முயற்சி இடம்பெற்றபோதும் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன் பின்பு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இத் திட்டம் மீண்டும் இந்த அரசில் இன்று மிகவும் இரகசியமாக நகர்த்தப்படுகின்றது.

இதற்காக அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை மேறகொண்டு தருமாறு 2022-09-26 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை நீர்ப்பாசன் அமைச்சர் ரொான் ரணசிங்க அமைச்சரவை அலுவலகத்திற்கு இரகசியமாக அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரிகின்றது.

அம்சிச்சார் ரொான் ரணசிங்காவினால் அனுப்பப்பட்ட இக்கடிதத்திற்கு IR/2022/40 என அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கமிட்டு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கொக்குளாய் முதல் நாயாறு வரையுள்ள 06 கிராம சேவகர் பிரிவுகள் முழுமையாக வெலிஓயா என்னும் சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்படும். இவ்வாறு இணைக்கப்படும் கிராமங்களின் கீழ் 6 ஆயிரம் கெக்டேயர் நிலம் அதாவது 15 ஆயிரம் ஏக்கர் விழுங்கப்படும்.

இவ்வாறு விழுங்க முயற்சிக்கப்படும் பிரதேசத்தில் 901 தமிழ் குடும்பங்களும், 269 சிங்களக் குடும்பங்களும் ஒரு முஸ்லிம் குடும்பமும் உள்ளன என் அமைச்சின் அமைச்சரவை அறிவித்தலில் அறிக்கையிடப்பட்டபோதும், இங்கே வாழும் சிங்கள் குடும்பங்களில் அதிகமானவை கடற்றொழிலில் அனுமதியின பெயரில் தற்காலிகமாகத் தங்கி வாழ்பவர்கள் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகவே குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் தமது பூர்வீக நிலமான கொக்குளாய் கிழக்கு, கொக்குளாய் மேற்கு, கருநாட்டக்கேணி, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு ஆகியவற்றுடன் செம்மலை ஆகிய கிராமங்கள் பறிபோவதுடன் வளம் மிக்க பிரதேசங்களையும் இழக்க நேரிடும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### ரவிகரன் கருத்து

இதேநேரம் இவை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கருத்து தெரிவிக்கையில் -

1983ஆம் ஆண்டிற்கு முன்னர் 38 பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் தொழில் புரிந்த நிலையில் இன்று 269 குடும்பம் இருக்கின்றனர் எனக் கணக்கிடப்படுகின்றது. ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் ஜே.ஆர் மேற்கொண்ட நரித்தனத்தினால் அமைக்கப்பட்ட திறந்தவெளிச் சிறைச்சாலையே தற்போது வெலிஓயா என எமது இதய பூமியை விழுங்கி நிற்கின்றது. இந்தச் சிறைச்சாலையில் கொண்டு வந்து இருத்தியவர்கள் ஆரம்பத்தில் கைதிகளேயாவர். அதாவது தமிழர்களையும் சிங்களவர்களையும் மோதவிடுவதற்கு என்றே திட்டமிட்டு உருவாக்கிய குடியேற்றத்திட்டம்தான் இது.

தற்போது 9 ஆயிரம் பேராக பல்கிப் பெருகி நிற்கின்றதனால் அவர்களிற்கு 114 சதுர கிலோ மீற்றர் போதவில்லை. இதற்காக காணி விழுங்கும் அமைச்சுக்களில் ஒன்றான மகாவலி அதிகார சபையின் திருட்டுத்தனமான வர்த்தமானி மூலம் நிலம் பிடித்து அந்த சிங்க மக்களை குளிர்விக்க முயற்சிக்கப்படுகின்றது.

இலங்கையில் மகாவலி அதிகார சபை என ஓர் ஆக்கிரமிப்புச் சபை உருவாக்கப்பட்டது முதல் தமிழர்களின் தாயகத்தை விழுங்கி சிங்களவர்களிற்கு தாரை வார்த்தனரே அன்றி ஒரு தமிழனிற்கு இன்று வரை ஒரு காணி அனுமதிப்பத்திரம் வழுங்கியது கிடையாது. இதற்குப் பெயரா அபிவிருத்தி? - என்றார்.

### சார்ள்ஸ் நிர்மலநாதன்

இதேநேரம் குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கருத்து தெரிவிக்கையில் -

இந்த விடயம் ஏறகனவே பல தடவை தடுக்கப்பட்டதனால் இம்முறை திருட்டுத்தனமாக நகர்த்தப்படுகின்றது. இவ்வாறு 6 தமிழ்க் கிராமங்களையும் கபளீகரம் செய்து வெலிஓயா பெருப்பிக்கப்பட்டதும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு முழுமையாக அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்படும், அதன் பின்பு அங்கேவாழும்தமிழ்மக்களின்அனைத்து உரிமையும் மறுக்கப்படும்போது அவர்கள் அங்கிருந்தும் இடம்பெயர வைக்க முடியும் என அரசு கருதுகின்றது.

இந்த சூழலையே ரணில் அரசும் இன்று ஏற்படுத்த முனைகின்றது. இதற்கு அரசோடு ஒட்டி நிற்கும் குழுக்களும் உடந்தையாக செயலபட்டு தமிழின அழிப்பிற்குத் துணை போகின்றன.

இதற்கு எதிராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சகல வழிகளிலும் போராடும் எனத் தெரிவித்ததோடு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா எம்மை அழைத்துக் கதைத்தபோதே நான் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் நிபந்தனையாகவே தெரிவித்திருந்தேன். அதாவது முல்லைத்தீவில் மகாவலி அதிகார சபை பிடித்து வர்த்தமானி அறிவித்தல் விட்டுள்ள பகுதிகளில் குடியேற்றம் இடம்பெற்றுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனையவை அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினேன்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி அந்த அமைச்சின் செயலாளரிடம் இருந்து விவரங்களை பெற்று பரிசீலித்துக் கூறுவதாகத் தெரிவித்த நிலையில் இதனை அனுமதிக்கவே முடியாது என்றார்.



# அரச நிதி குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கியிருந்தால் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்காதாம்!

## கூறுகிறார் லக்ஷ்மன் கிரியெல்ல



அரசநிதி குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கியிருந்தால் நாட்டின் நிதி தொடர்பான உண்மையைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்போம். நாடு இந்தளவு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்காது என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையியற் கட்டளை திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஜூன் 7 ஆம் திகதி நாடாளுமன்றக் குழு கூடிய போது கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு ஜூலை மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற நடவடிக்கைகள் குழுவில் பிரேரணை கொண்டு வந்தபோது அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

இதன்போது சபாநாயகர் அதற்குத் தேவையான நிலையியற் கட்டளையில் திருத்தம் மேற்கொள்ளுமாறு கூறியிருந்தார். ஆனால் அந்த திருத்தம் தற்போது மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் கோபா கூட்டத்தில் கபீர் ஹாசிமுக்கு அதன் தலைவர் பதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை வரவேற்கின்றேன்.

அத்துடன் கோப் குழு தலைவர் பதவிக்கான வாக்கெடுப்பும் நடக்கவுள்ளது. இந்த வாக்கெடுப்பை நிகழ்நிலையில் நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் எமது உறுப்பினர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன் துறைசார் மேற்பார்வை குழு நல்லாட்சி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கடந்த 2 வருடங்களாக அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்தக் குழு நாட்டுக்கும் எம்.பிக்களுக்கும் நல்லதே. ஆனால் இரண்டு வருடங்களாக அது நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் தற்போது அதனை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கின்றோம்.

அத்துடன் அரச நிதிக்குழு தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவேண்டும் என நாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே தெரிவித்து வந்தோம். அதனை அரசாங்கம் செய்யவில்லை. அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான குழுக்களின் தலைவர் பதவி எதிர்க்கட்சிகே வழங்கப்பட்டிருக்கின்றது. இது அரசாங்கத்துக்கும் நல்லது.

ஏனெனில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தலைவராக இருக்கும்போது அரச தரப்பு உறுப்பினர்கள் மோசடிகளில் ஈடுபட அச்சப்படுவார்கள். அதேநேரம் நிதிக் குழுவின் தலைமை பதவிக்கு நாங்கள் ஹர்ஷ டி சில்வாவை நியமிக்க பரிந்துரை செய்தோம். ஆனால் சபாநாயகரும் முன்னாள் பிரதமரும் நிலையியல் கட்டளைகளை நிறுத்தி, அதனை ஆளும் கட்சிக்கு வழங்கினர்.

இது தொடர்பான நடவடிக்கைகளை அன்று முன்னெடுத்திருந்தால் இப்போது நாட்டுக்கு ஏற்பட்டிருந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் பணம் இருப்பதாக கூறினர். ஆனால் முன்னரே எங்களிடம் நிதி குழுவின் தலைவர் பதவியை வழங்கியிருந்தால் உண்மையை கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்போம். சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்குத் தீர்மானித்திருப்போம். அப்போது மக்கள் கஷ்ட நிலைக்கு ஆளாகி இருக்க மாட்டார்கள்.

அத்துடன் 1971 இல் ஏற்பட்ட வன்முறைகளின் போது மக்கள் ஆணை இல்லாமல் போகவில்லை என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார். அது உண்மைதான் ஆனால் இப்போது உள்ள நிலைமை வேறு. இப்போது போராட்டத்தால் பிரதமர், ஜனாதிபதி, அமைச்சரவை உள்ளிட்ட மக்கள் ஆணை உள்ளவர்கள் விட்டுச் சென்றனர். ஆனால் ஆணை இல்லாதவர்கள் பதவிகளைப் பெற்றுள்ளனர். –என்றார்.

## கொட்டகலையில் வீடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தை பாதுகாப்பாக மீட்பு!

கொட்டகலை, திம்புளை-பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் தோட்டத்தின் வட்டக்கான் பிரிவிலுள்ள வீடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தை, பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரந்தெனிகல மிருக வைத்தியசாலையின் அதிகாரிகள் குழுவொன்றும், நுவரெலியா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து சுமார் 5 மணி நேரம் முன்னெடுத்த கூட்டு நடவடிக்கையின் பின்னர் இந்த சிறுத்தை, பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

சுமார் 4 அடி நீளமான, ஒரு வயதான இந்த ஆண் சிறுத்தை நாயொன்றை வேட்டையாட வந்தவேளை, வீட்டின் பின்பகுதியில் உள்ள அறைக்குள் விழுந்து அதற்குள் சிக்கிக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



மீட்கப்பட்டுள்ள சிறுத்தை, தற்போது ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உடல் நிலை பரிசோதிக்கப்பட்ட பின்னர், சிறுத்தை பாதுகாப்பான வனப்பகுதியில் விடுவிக்கப்படும் என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## அதிகரித்துள்ள பணவீக்கத்திற்கு இணையான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என அரச ஊழியர்கள் கோரிக்கை!

கொழும்பு, ஒக். 07

அதிகரித்துள்ள பணவீக்கத்துக்கு இணையான கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க முனசிங்க இதனைத் தெரிவித்து உள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கை செலவினம் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. உணவு பணவீக்கம் 80 சதவீதத்தையும் கடந்துள்ளது.

அண்மையில் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போதிலும், அதில் எவ்வித ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.

எனவே அரசாங்கத்தின் பணவீக்கத்துக்கான கொடுப்பனவு வழங்க வேண்டும் என ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையத்தின் பொதுச்செயலாளர் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

பொருள்கள் மற்றும் எரிபொருள் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு உயரம் பாய்தல் மன்னார் மாணவன் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு!

மன்னார், ஒக். 07

மன்னார்– உயிர்த்தராசன்குளம்றோ.க.த.க. பாடசாலை மாணவன் சி.விஜய், 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு உயரம் பாய்தலில் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற வடமாகாண மட்ட மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியில் வெற்றிபெற்று, தேசிய மட்ட போட்டிக்கு தெரிவானார்.

பயிற்றுவிப்பாளர் ஆ.கு.றொசேன் செரூபா பீரிஸ், பாடசாலையின் அதிபர் வு.ஆனந்தன் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் விளையாட்டுத்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர், தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள மாணவன் சி.விஜய் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



## வவுனியாவில் வெடிகுண்டுகள் விசாரணைகள் ஆரம்பமாகின!

வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட மலசல கூடத்தைப் புனரமைக்கும் பணியை மேற்கொண்டிருந்த போதே இந்த வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது 60 மில்லி மீற்றர் குண்டு ஒன்றும் கைக்குண்டு ஒன்றும், சிறிய ரக மிதிவெடி ஒன்றையும் பொலிஸார் இனங்கண்டனர்.

இதுதொடர்பான மேலதிக தகவல் எதுவும் வெளியாகாத நிலையில், இது தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## ஆசிரியர் உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படல் வேண்டும்

### ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் உரிமைகளை வென்றெடுத்த பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்துகொண்ட போதே ஜோசப் ஸ்டாலின் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்தப் பொருளாதாரக் கொள்கையில் அரசாங்கம் நாட்டை முழுவதுமாக திவாலாக்கிவிட்டது என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

தற்போது, ஆசிரியர்கள் பாடசாலைக்கு வர வழியில்லை. கடுமையான பயணச் செலவுகளைச் சுமக்க வேண்டியுள்ளதாகவும் இது தொடர்பாக அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அடுத்த மாதம் முதல் அதிகரிக்கின்றது இந்தியா - இலங்கை விமான சேவை!

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகளை அடுத்த மாதம் முதல் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2022இல் வெளியிடப்பெற்றது.